பக்கங்கள்-16 | 30,வைகாசி.2021 | விலை-30.00




# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -346



# இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் சீனாவின் கொத்தடிமைகள்

## இலங்கை துறைமுகத்தில் சீனா தனது அனு ஆயுதங்களை மறைத்து வைக்கும் ஆபத்து!

## இலங்கையில் ஈழராஜ்யத்தை அமைக்க அமெரிக்கா , இந்தியா முயற்சி

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் சீனாவின் கொத்தடிமைகள்!



உலகளவில் இன்று பெரிதும் பரபரப்பாக பேசப்படும் ஒரு விடயம் தான் கொரோனா வைரஸ். இந்த கொரேனா வைரஸி லிருந்து படிப்படியாக உலகம் மீண்டு வருகின்ற சூழ்நிலையில் கொரோனா வைரஸை பரப்பிய சீன நாடு அதன் தன்னிறைவு பொருளாதாரத்தை உலகளாவிய ரீதியில் கட்டியெழுப்பும் ஒரு நடிவடிக்கையாக கொரோனா வைரஸை பயன்படுத்தியுள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் கொரேனா வைரஸினுடைய தாக்கம் சீனாவின் நடவடிக்கைகள் எவ்வாறானது என்று தெரிந்தும் தொடர்ந்தும் அவர்களுடன் கைகோர்த்து பயணிப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று.

தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் சீன அரசாங்கம் ஏன் களமிறங்கியது. தன்னுடைய தன்னிறைவு பொருளாதாரத்தை இலங்கையில் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் பெரிதும் தடையாக காணப்படுவார்கள் என்பதற்காகவே விச வாயுக்களையும் கொத்துக்குண்டுகளையும் பயன்படுத்தி தமிழர் தாயகத்திற்கான போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்கள். ஒரு விடயத்தை சிந்திக்க வேண்டும். இதே சுயநலப்போக்கில்தான் 1989 ஆம் ஆண்டு இந்திய அரசு இலங்கையில் கால்பதித்த பொழுது வடகிழக்கை தமிழர்களுடைய கையில் கொடுத்துவிட்டு செல்வதற்கே வந்தார்கள். அக்காலகட்டத்தில் ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கு பின்பு மிக தந்திரமாக செயற்பட்ட ரணசிங்க பிரேமதாஸ இந்த நாட்டில் இந்தியப்படைகளை விரட்டியடிக்க திட்டமிட்டார். அந்த அடிப்படையில் இலங்கை அரசு இந்தியாவுடன் மோதக்கூடிய சூழ்நிலை அக்காலகட்டத்தில் இருக்கவில்லை. அதே நேரம் இலங்கை அரசு இந்திய அரசை பகைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை. மிகத் தந்ரோபாயமாக தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயன்படுத்தி இந்திய அரசுக்கு எதிராக போரை கட்டவிழ்த்துவிட்டிருந்தார் மறைந்த முன்னாள் பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ. அது மட்டுமன்றி இந்திய இராணுவம் இந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு ஐந்தம்ச கோரிக்கைகளுடன் தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்தார். இந்திய அரசுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் எதிர்ப்புக்கள் அதிகரிக்கவே இந்த நாட்டை விட்டு இந்திய அரசு வெளியேறியது.

இந்தியா இராணுவத்தை வெளியேற்றினால் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கி தருவதாக கூறிய ரணசிங்க பிரேமதாஸ வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை பெற்றுக்கொடுக்காது மீண்டும் விடுதலைப்புலிகளை சமாதான பேச்சுக்கு அழைத்து அவர்களை பலவீனப்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பித்தார். வாக்குறுதியை நிறைவேற்றாததனால் மீண்டும் விடுதலைப்புலிகள் இலங்கை அரசுடன் போரை ஆரம்பித்தனர். ரணசிங்க பிரேமதாஸ தமிழீழ விடுதலைப்புலிகளின் குண்டுகளுக்கு (1993) இழக்காகி பலியானார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் இந்த நாட்டில் 30 வருடம் நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது அவர்களை மீறி இந்த நாட்டிற்குள் கப்பல்களோ விமானங்களோ வர முடியாத சூழல் மிக இறுக்கமாக இருந்தது. ஆனால் இன்று அனைத்து நாட்டு கப்பல்களும் சுயாதீனமாக தமது இராஜதந்திர ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் இலங்கைக்கு வந்துபோகின்றன. இவ்வாறிருக்கின்ற சூழ்நிலையில் இலங்கை அரசை கடன் பொறியில் விழுத்தி மாறி மாறி வருகின்ற அரச தலைவர்களுடன் ஒப்பந்தங்களை செய்துகொண்டு சீன அரசாங்கம் தனது அரசியல் காய் நகர்வுகளை செவ்வனவே நகர்த்தி வந்துள்ளது. தற்பொழுது சீனாவினுடைய ஆக்கிரமிப்பிலிருந்து எவ்வாறு எம்மை பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற கேள்வி ஒருபுறமிருக்க சீனர்களை இந்த நாட்டிலிருந்து அடித்து விரட்டுவதற்கான காலமும் கனிந்துள்ளது.

கொழும்பு போர்ட்சிட்டி மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் இரண்டிலுமே தனது வியாபார நோக்கில் நிரந்தரமாக காலை பதித்துள்ளது சீன அரசு. இதிலிருந்து எவ்வாறு மீட்சி பெறுவது என்று இன்னமும் இலங்கை அரசு சிந்திக்கவில்லை. வெறுமனே அரசியல் இலாப நோக்கிற்காக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச செயற்படுகின்றார். சீன அரசாங்கம் இலங்கைக்கு என்னென்ன விபரீதங்களை ஏற்படுத்தப்போகின்றது என முற்கூட்டியே சிங்கள தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியும் அதனை அவர் சரியாக செயற்படுத்தாததன் காரணமாக இந்த இலங்கை திருநாட்டில் பல இடங்களை விற்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. சர்வதேச ரீதியிலான போராட்டங்களை பொறுத்தவரையில் அமெரிக்கா சீனா ,ந்தியா ரஷ்யா பிரான்ஸ் போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் ஒரு நாட்டை அடிமைப்படுத்திவிட்டால் தமது பொருட்களை அந்தந்த நாட்டில் சந்தைப்படுத்தமுடியும் என்பதும் அவர்களை தாம் எந்த வேளைகளிலும் கொத்தடிமைகளாக வைத்திருக்கலாம் என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்தும் சீன அரசு செயற்பட்டுவருகின்றது.

ஆகவே இந்திய அரசாங்கத்தை எவ்வாறு இந்த நாட்டிலிருந்து இலங்கை அரசு வெளியேற்றியதோ அதன் அடிப்படையில் சீன அரசையும் இந்த நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அவ்வாறு செய்வதனூடாக மாத்திரமே சீனாவின் நில ஆக்கிரமிப்பு, மொழி ஆக்கிரமிப்பு என்பன நாட்டிலிருந்து இல்லாதொழிக்கப்படும். பொருளாதார ரீதியில் மிக வேகமாக வளர்ச்சியடைந்துள்ள சீன அரசு ஆயுத ரீதியில் அமெரிக்கா பிரான்ஸ் ரஷ்யா போன்ற நாடுகளை வெல்ல முடியாது என்றதொரு நிலைப்பாட்டினால் இவ்வாறான வைரஸினூடாக இலகுவில் ஒரு நாட்டை பிடித்துவிடமுடியும் என்ற செயற்திட்டத்தையும் தற்பொழுது பரீட்சாத்தியமாக செய்துள்ளது. தன்னிறைவு பொருளாதாரத்தை இலங்கை கொண்டிருக்க வேண்டும் என்பது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவினுடைய வேண்டுகோளும் கூட. ஆனால் அவரால் அதனை தொடர்ந்தும் செயற்படுத்தமுடியாது போய்விட்டது என்பது கவலைக்குரிய விடயம்.

ஆகவே சீன அரசை அதனுடைய ஆக்கிரமிப்புக்களை தற்பொழுதிலிருந்தே நாம்கொஞ்சம்கொஞ்சமாக வெளியேற்றும் நடவடிக்கைகளை கையாள வேண்டும். அதற்கு தமிழ் சிங்களம் முஸ்லிம் என்ற வேறுபாடுகளை களைத்து அரசியல் ரீதியாக எமது இலங்கைக்குள் நாம் ஒன்றுபட வேண்டும். இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளும் அன்று தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை அழிக்க வேண்டும் என்று துடியாய் துடித்தார்கள். இன்று அவர்கள் சீன அரசாங்கம் இலங்கைக்குள் ஊடுருவியிருப்பது என்பது இந்த நாட்டில் ஒரு தமிழீழத்தை உருவாக்கும் நிலை உருவாகும் என்று தமது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டிருப்பது என்பது மிக வேடிக்கைக்குரிய விடயம். எது எவ்வாறிருப்பினும் எமது நாட்டை நாம் பாதுகாக்க வேண்டிய சூழல் தற்பொழுது உருவாகியுள்ளது. அதற்கான தயார்ப்படுத்தலை இந்த நாட்டில் பற்றுள்ளவர்கள் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். சட்டங்கள் வகுக்கப்பட்டு இந்த நாட்டுக்குள் நுழைபவர்கள் இந்த நாட்டு பிரஜைகளாக இருந்தால் மட்டுமே அவர்கள் உரிய வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வர்த்தக ரீதியாக உடன்படிக்கைகளை கைச்சாத்திடுபவர்கள் இந்த நாட்டின் உடன்படிக்கைக்கு அமைவாக பாராளுமன்ற சட்டதிட்டங்களுக்கமைய செயற்படுவார்களாக இருந்தால் மட்டுமே இந்த அரசாங்கம் சீனாவின் பிடியில ' இருந்து விளகிக்கொள்ளமுடியும். அதுமட்டுமன்றி இந்த நாட்டில் செயற்படுகின்ற **CID, NIB, TID** போன்ற பொலிஸ் புலன் விசாரணை குழுக்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். வெறுமனே இவர்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்படாமையினால் அந்நிய நாடுகளின் ஊடுருவல் வெற்றி கூடுதல் கவனம் செலுத்த முடியாதுள்ளது. மில்ரி புலனாய்வு என்பது போர் தந்திர நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட விடயங்களை தொடர்ந்தும் பயிற்சியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு இருந்தால் மட்டுமே சர்வதேச ரீதியாக ஏற்படுகின்ற பூகோள அரசியல் சார்ந்த விடயங்களை கையாளுகின்ற திறனை குறித்த புலனாய்வு கட்டமைப்பு கொண்டிருக்கும்.

குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பானது சீன போர்ட்சிட்டி சம்பந்தமாக மௌனிகளாக இருந்து வேடிக்கை பார்க்க வேண்டுமே தவிர இதற்கு ஆதரவாகவோ எதிராகவோ கருத்து சொல்லத்தேவையுமில்லை. இதிலிருந்து எமது அரசியல் காய் நகர்த்தல்களை எவ்வாறு நகர்த்தலாம் என்பதே எமக்கு முக்கியம். வர்த்தக ரீதியாக சீனா ஏனைய நாடுகளை பலவீனப்படுத்துவதற்கு ஒரு வழியை மேற்கொண்டுள்ளது. ஆகவே சீனாவின் பிடியிலிருந்து ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச இருவரும் தப்பித்துக்கொள்வதற்கான நிலைமையை உருவாக்க வேண்டும். சீனாவினுடைய ஆதிக்கம் தொடர்ந்தும் இலங்கையில் செலுத்தப்படுமாக இருந்தால் இந்த இலங்கைத்தீவு ஒரு யுத்தகளமாக மாறும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. சிந்திப்போம்! செயற்படுவோம்! செயற்படுத்துவோம்!

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## இலங்கைத்திருநாடு லங்காசீனா என்று மாற்றப்படும் அபாயம்!

30 ஆண்டுகால போராட்ட வரலாற்றில் இலங்கைத் திருநாட்டுக்குள் எந்தவொரு நாடும் காலூன்றவில்லை. ஆனால் யுத்தத்தின் பின்னர் இலங்கையை கூறுபோடும் வகையில் பல்வேறு நாடுகள் தமது காலனித்துவத்தை செலுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். பெரும் பொருளாதார வளர்ச்சி கண்ட நாடுகள் தமது பொருளாதாரத்தை இலங்கைக்கு வழங்கி அதனூடாக இலங்கையை பிரித்தாளுகின்ற பூகோள தந்திரோபாயத்தினை பயன்படுத்தலாம் என எதிர்பார்த்தனர். ஆனாலும் ஆயுதப்பலம், பொருளாதார பலம் சர்வதேசத்தில் வெற்றிகொள்ள முடியாத ஒரு நாடாக சீனாவை இலங்கை அரசு தெரிந்தெடுத்தது. இதனால் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளை பகைத்துக்கொண்ட இலங்கை இன்று சீனாவிடம் பாரிய கடன் தொகையை பெற்று கடனில் மூழ்கிப்போயுள்ளது.

அதனால் சீனா அரசாங்கமானது கடன் சுமையை கொடுத்து தான் சொல்லுகின்ற விடயங்களை மாத்திரமே செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு இலங்கை அரசை கொண்டுவந்துள்ளது. போர்ட்சிற்றி கட்டுவதற்கான அதிகாரபூர்வமான மசோதாவை 26 ஆம் திகதி மே மாதம் 2021 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கொரோனா சூழ்நிலை ஒருபுறமிருக்க சீன அரசாங்கத்தை தமது கைவசம் வைத்திருந்தால் மட்டுமே கொரோனா அச்சுறுத்தலில் இருந்தும் தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்ற ரீதியிலும் பொருளாதார ரீதியில் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற சீன அரசாங்கத்தை புறம்தள்ளுகின்ற சூழலில் எதனையும் சாதித்துவிட முடியாது என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது.

ஆகவே தான் சீன அரசாங்கத்தின் மேளத்திற்கு தாளம் போடுகின்ற ஒரு அரசாங்கமாக இலங்கை அரசு பார்க்கப்படுகிறது. இருப்பினும் பூகோள ரீதியாக இலங்கை அரசு எடுக்கின்ற முடிவு என்பது பல நாட்டை தக்கவைப்பதற்கான முடிவாகும். இதனால் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்ப்பை மாத்திரமே இலங்கை சம்பாதித்துக்கொள்ளும். குறிப்பாக கொரோனா வைரஸை பரப்பிய சீன அரசு மேன்மேலும் வேறு வேறு இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி ஒட்டுமொத்த இலங்கையை தனது கட்டுப்பாட்டின் கீழ் சீனலங்கா என்று கொண்டுவரும் சூழல் 2040 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஏற்படுத்தப்படலாம். 40 ஆயிரம் சீன பிரஜைகள் தங்குவதற்கான வீடு வசதிகள் கொண்டதாக போர்ட்சிட்டி அமையப்பெறப்போகிறது. இதற்குள் கசினோ போன்ற களையாட்ட விடுதிகளும் அமைய இருக்கின்றன. பாலியல் தொழில்களை பூர்த்திசெய்வதற்கு எவரும் எந்த நேரத்திலும் சென்றுவரக்கூடிய அனுமதி இந்த போர்ட்சிட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியினால் நியமித்த குழு மட்டுமே போர்ட்சிட்டி தொடர்பான விடயங்களில் தலையிட முடியும். எந்தவொரு அமைச்சரோ ஆளுனருக்கோ அதிகாரமில்லை. இவ்வாறானதொரு நிலையில் அங்கு ஒரு தனி சீன இராட்சியம் நிருவப்பட்டுள்ளது எனலாம். வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை இந்த நாட்டில் வாழுகின்ற தமிழினத்திற்கு வழங்க மறுத்துவந்த இலங்கை அரசு சீனாவின் பணத்திற்கு அடிமையாகி இந்த நாட்டை முழுமையாக இருக்கின்றசூழல்நாளடைவில்உருவாகும் என்பதில் மாற்றக்கருத்தில்லை. குறிப்பாக போர்ட்சிட்டி என்பது ஆசிய பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சீனாவின் ஒரு புலனாய்வு மையம் எனலாம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**149**

உண்மையில் (பாலங்கள், கால்வாய்கள், சுற்றுச்சாலைகள் போன்றவற்றைத் தவிர) வீதிகளில் நடைபெறும் கண்ணித் தகர்ப்புகள் கூடுதல் விளைவைத் தருவதில்லை.

வீதிகளில் ஏற்படுத்துகின்ற தடையமைப்புகள் எதிரியின் நகர்வைத் தடைப்படுத்துவது மாத்திரமன்றி, அவன் தடையை அகற்றும் நேரத்தில் அவனைச் சுட்டுத் தாக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் தோற்றுவிக்கின்றன.

தடைகளை ஏற்படுத்தும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில், தடைகளை எதிரி எதிர்கொள்ளும் போது தனது வழிகாட்டியைப் பயன்படுத்தி நகர்வதற்கான பிற பாதைகளைத் தேடுவான்.

வீதியின் பொருத்தமான இடத்தில் கண்ணி வைத்தல்

சிதறு துண்டுகளையும் சன்னங்களையும் கொண்ட கண்ணிகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தலாம், அவற்றைப் பொருத்துவது குறைந்தளவு சிரமமும் கூடியளவு வசதியைக் கொண்டதாகவும் ,ருக்கும்.

இவற்றை மரக்குற்றியில் இணைக்கலாம். மரக்குற்றி நிலத்தினுள் 0.5 மீற்றர் ஆழத்திற்குப் புதைக்கப்படும். மரக்குற்றியில் கண்ணி இணைக்கப்படும் உயரம் அக்குள் உயரத்திற்கு கிட்டவாகும். மின்சாரக்கம்பியின் ஒரு முனை கண்ணியின் வளையத்தில் இணைக்கப்படுகின்றதுடன் மறு முனை ஏதாவதொரு பொருளிற்குப் பின்னால் இணைக்கப்படும். இங்கே பிரதானமானது யாதெனில், கண்ணி ஏதாவது பொருட்களால் உருமறைக்கப்பட்டிருக்க வேண்டும். நீண்டுசெல்கின்ற மின்சாரக்கம்பி ஓரளவேனும் தெரியாமல் இருக்க வேண்டும்.

இவ்வாறான கண்ணிகளைப் பொருத்தும் போது, குறித்தளவு அவதானம் மின்சாரக் கம்பியை இணைக்கும் போதும் கட்டவிழ்த்துச் செல்லும் போதும் அவசியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ராங்கியெதிர்ப்புக் கண்ணிகளைப் பயன்படுத்துவதும் வசதியாகும். இவை தரையில் பொருத்தப்படுவதுடன் தரையில் நன்றாகவும் உருமறைக்கப்படுகின்றன. இவ்வாறான ஒரு கண்ணியைப் பொருத்துவதற்கான சகல வேலைக்கும் 10 நிமிடத்திற்குள்ளான நேரம்செலவாகின்றது.,தனதுவெடிப்பு எதிரியின்நகர்வைக்கணிசமான அளவு நேரத்திற்குத் தடைப்படுத்துகின்றது. கவனத்திலெடுக்க வேண்டிய ஒரேயொரு விடயம் யாதெனில், இப்பிரதேசத்தில் கெரில்லாக்கள் செயற்படுகின்ற நேரத்தில் அவர்களது காலடிபட்டு இக்கண்ணிகள்வெடித்துச் சிதறலாம்.



எதிரியின் போக்குவரத்தைத் தடைப்படுத்துவதில் பிரதான முக்கியத்துவத்தைப் பொருத்தமான இடத்திலும் சந்துகளிலும் வீதிகளை நாசமாக்குதல் கொண்டிருக்கின்றது. இப்பணியை அப்பிரதேச மக்களாலும் நிறைவேற்றலாம். ஆனாலும் நாசமாக்கப்பட்ட வீதிகளைச் செப்பனிடுவதற்காக எதிரி அதே பிரதேசமக்களையும்பயன்படுத்தலாம். இருந்த போதும் சகல சந்தர்ப்பங்களிலும் எதிரி நேரத்தைச் செலவழிக்க வேண்டியேற்படுகின்றது. இதுவே கெரில்லாக்களுக்குச் சாதகமானதாகும்.

**போக்குவரத்து ஊடகங்களை நாசமாக்கல்**

இவ் வேலையைப் பின்வரும் வழிகளில் மேற்கொள்ளலாம்:

வாகனங்களின் எரிபொருள் தாங்கியினுள் அல்லது எண்ணெய் செல்கின்ற குழாயினுள் மண் போடுதல்.

எரிபொருள் தாங்கியில் துளையிடுதல்.

நீர் வெப்பநிலையையும் எரிபொருளின் அளவையும் காட்டும் கணிப்பியைச் சேதமாக்கல்.

எதிரியிடத்தில் வேலை செய்கின்ற கெரில்லாக்களின் ஆதரவாளர்கள் கூடியளவு பிரயோசனமான பலன்களைத் தருவார்கள். அவர்கள் பின்வரும் நடவடிக்கைகளை யாருக்கும் தெரியாமல் மேற்கொள்வார்கள்.

மின் கலத்தினுள் அமிலத்திற்குப் பதிலாக நீரை ஊற்றுதல்.

வாகனத்தின் வரையறுக்கப்பட்ட அளவு வரை எரி பொருள் ஊற்றாமல் விடுதல்.

மோட்டார்களின் பட்டிகளை அறுத்தல்.

சக்கரங்களின் காற்றைத் திறத்தல்.

ரேடியேற்றரைப் பூரணமாக நீரால் நிறைக்காமை.

நீரியக்கத்திலிருந்து வேகத்தடைகளைத் துண்டித்தல் அல்லது வாகன ஸ்டியரிங் அச்சாணியை தளர்வாக விடுதல்.

வாகனங்களின் கதவைத் திறந்து அதனுள் பத்திரிகைகளை எரித்துப்போட்டு அல்லது எரி பொருள் தாங்கியினுள்கந்தல்துணியைஎரித்துப் போடுவதன் மூலம் வாகனங்களைத் தீக்கிரையாக்கல் போன்றன.

பதுங்கியிருந்து போக்குவரத்தின் மீது தாக்குதல்

பதுங்கித் தாக்குதல் பின்வரும் முறையில் ஒழுங்கமைக்கப்படுகின்றது. ஒரு குழு, வாகனத்தின் இயந்திரப் பகுதிமீது தாக்குவதற்காக நிலையெடுத்திருக்கும். மற்றையது, பின்பக்கத்திலிருந்து அல்லது பக்கங்களிலிருந்துசெயற்படுவதற்காக நிலையெடுத்திருக்கும். வாகனம் (பேரூந்து) நெருங்கி வந்ததும் சாரதி மீது திடீர்த் தாக்குதல் தொடுக்க வேண்டும். இதன் போது, சிறியரக ஆயுதங்களைப் (கைச்சுடுகலன் அல்லது சுரிசுடுகலன்) பயன்படுத்த வேண்டும். சிறியரக ஆயுதங்கள் பெரிய சத்தத்தைத் தரமாட்டாது. இது மிகவும் முக்கியமானதாகும். அத்துடன், ஈய ரவைகொல்லும் திறனைக் கொண்டிருக்காமையால், சாரதியும் கொல்லப்பட மாட்டான். இவ்வாறு சாரதியையும் அவனது உதவியாளனையும் சுட்டுவிட்டு, வேகமாக வாகனத்தை நெருங்க வேண்டும். கூரான (கத்தி போன்றன) ஆயுதங்களைப் பயன்படுத்தி, அவர்களைப் பரலோகம் அனுப்பிவிட்டு, வேகமாக வாகனத்தைச் செலுத்த வேண்டும். சாரதிகளின் உடலை வெளியே தள்ளி எறிந்துவிட்டு, அங்கிருக்கின்ற ஆயுதங்களுடன் வாகனத்தின் வேகத்தை அதிகரித்து, பிரதான குழு தங்கியிருக்கின்ற இடத்திற்கு வேகமாகச் செல்லவேண்டும். பதுங்கித்தாக்குதல் நடவடிக்கைக்குப் பாதுகாப்பளிக்கும் முகமாகக் கெரில்லாக் குழு அவசியம் வீதியைக் கண்காணிக்க ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். இதன் மூலம் ஆபத்து ஏற்படுவதையும் ஏனைய வாகனங்கள் வருவதனையும் முற்கூட்டியே தெரியப்படுத்தலாம். வாகனத்தைக் கைப்பாற்றியபின், கெரில்லாக்கள் தமது இரகசிய இடத்தில் மறைந்துகொள்வார்கள். எதிரியுடன் முட்டுப்பட நேர்ந்தால், பதுங்கித் தாக்குதல் குழு பின்வாங்குவதற்குக் காப்பளிக்கின்ற குழு உதவிசெய்யும். கெரில்லாக் குழு தங்கியிருக்கின்ற நடுவகத் தளத்திலிருந்து அனுப்பப்படுகின்ற பதுங்கித் தாக்குதல் ஆளணிகள் பின்வரும் உபகுழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

**நெற்றிபொறியன்**
**தொடர்வான்...**

# இலங்கை துறைமுகத்தில் சீனா தனது அணு ஆயுதங்களை மறைத்து வைக்கும் ஆபத்து



30 நிமிடங்களில் அமெரிக்காவை தாக்கும் நவீன ஆயுதங்களை காட்சிப்படுத்தி, 70-வது ஆண்டு தேசிய தின அணிவகுப்பு மூலம் தனது ராணுவ வலிமையை உலகுக்கு வெளிப்படுத்தி உள்ளது சீனா.

சீனாவில்கம்யூனிஸ்ட் அரசுஆட்சிக்குவந்து இன்றுடன் 70வது ஆண்டுகள் ஆகிறது. பொருளாதாரத்தில் மிகவும் நலிவுற்று பின்தங்கியிருந்த சீன நாடு, கம்யூனிச புரட்சிக்கு பின், கடந்த 70 ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து, தற்போது மிகப்பெரிய வல்லரசு நாடாக உருவாகியுள்ளது.

இதை ஒட்டி தியான்மென் சதுக்கத்தில் பிரமாண்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.. இதனை நேரில் காண, சுமார் 1 லட்சம் மக்கள் சீனக் கொடிகளுடன் திரண்டிருந்தனர்.

விழா துவக்கத்தில், 70 துப்பாக்கி குண்டுகள் முழங்க, 5 நட்சத்திரத்துடன் கூடிய செந்நிற சீன கொடி, கொடி கம்பத்தில் ஏற்றப்பட்டு, சீன கீதம் பாடப்பட்டது. அதனைத்தொடர்ந்து சீன புரட்சியின் போது, உயிர் நீத்த வீரர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் சிறப்புரையாற்றிய சீன அதிபர் ஜி ஜின்பிங், சீனாவில் வசிக்கும் பலதரப்பட்ட மக்களுக்கும் தேசிய தின வாழ்த்துக்களைக் கூறினார். சீனா கம்யூனிஸ்ட் அரசு உருவாக உறுதுணையாக இருந்த வெளிநாடுகளில் வாழும் சீன மக்களுக்கும் வாழ்த்து தெரிவித்தார். அதிபரின் உரையை அடுத்து, பிரமாண்ட ராணுவ அணிவகுப்பு நடைபெற்றது.

இருபிரிவுகளாக சுமார் 80 நிமிடங்கள் நடந்த கண்கவர் ராணுவ அணிவகுப்பை கூடியிருந்த அனைவரும் கண்டு களித்தனர். ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதை முடிந்ததும், ராணுவ தளவாடங்களின் அணி வகுப்பு நடைபெற்றது. பீரங்கிகள், வானூர்தி, சிறிய தூரத்தில் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணைகள் உள்ளிட்டவைகள் அணிவகுத்து சென்றன.

விமானப் படை மற்றும் காலாட் படைகளின் சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அணிவகுப்பு நிகழ்ச்சியில், சிறிய, நடுத்தர ஏவுகணைகள், கண்டம் விட்டு கண்டம் தாவும் மிக நீண்ட தொலைவுக்கான டோங்பெங் ஏவுகணைகள் ஆகியன அணிவகுத்துச் சென்றன.
தேசிய தின அணி வகுப்பு மூலம் சீனா தனது ராணுவ வலிமையை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. தேசிய தின அணிவகுப்பில் 15,000 ராணுவ வீரர்கள் பங்கேற்றுள்ளனர். ராணுவத்தின் 59 வெவ்வேறு பிரிவுகளின் வீரர்கள் கலந்து கொண்டனர், அணிவகுப்பில் சீன ராணுவம் 160க்கும் மேற்பட்ட விமானங்களும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 580 வாகனங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த ராணுவ அணிவகுப்பின் போது வெளியிடப்பட்ட ஆயுதங்களில் 40 சதவீதம் இதுவரை பகிரங்கமாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் மிகவும் மேம்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ஐசிபிஎம்) இது 14, 000 கிலோமீட்டருக்கும் அதிகமான தூரம் சென்று இலக்கை தாக்க வல்லது. டி.எ.ஃப் -41 பூமியில் எந்தவொரு இலக்கையும் தாக்கும். தானாக இலக்கு தாக்கக்கூடிய அணு ஆயுதங்களை சுமக்கும் திறன் கொண்டது. அமெரிக்க எல்ஜிஎம் -30 மினிட்மேனை விட டிஎ.ஃப் -41 இப்போது உலகின் மிக நீளமான ஏவு-கணை ஆகும். இது 13,000 கிலோமீட்டர் தூரம் சென்று தாக்க வல்லது. சீன பாதுகாப்பு நிபுணர்களின் கூற்றுப்படி இந்த ஏவுகணை 30 நிமிடங்களுக்குள் அமெரிக்க கண்டத்தைத் தாக்கும் திறன் கொண்டது.

சீனாவிலிருந்து விமானத்தில் அமெரிக்கா செல்ல தூரம், 11,671 கிலோமீட்டர். மணிக்கு சுமார் 560 கிலோமீட்டர் வேகத்தில் பயணித்தால் சுமார் 13 மணி நேரம் ஆகும். ஆனால்,சீன ஏவுகணை 30 நிமிடத்தில் அந்த தூரத்தைக் கடக்கும் திறன் கொண்டுள்ளது.

டோங்ஃபெங் -17 ஒரு குறுகிய முதல் நடுத்தர தூர ஏவுகணை ஆகும். இது ஹைப்பர்சோனிக் கிளைடு வாகனத்தை செலுத்தும் திறன் கொண்டது. இந்த ஏவுகணை ஒலியின் வேகத்தை தாண்டியது அமெரிக்க ஏவுகணைக் கவசங்களை ஊடுருவக்கூடிய திறன் உடையதாகும்.

தேசிய தின அணிவகுப்பின் போது சீனாவால் காட்சிப்படுத்தப்பட்ட மற்றொரு மேம்பட்ட ஆயுதம் **HQ-9B** வானில் இருந்தபடி பல ஏவுகணைகளைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது.

HQ-9B 100 கடல் மைல் தொலைவில் உள்ள இலக்கு விமானங்களைத் தாக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணைகள் தென் சீனக்கடலின் தெற்குப் பகுதியில் உள்ள எந்தவொரு கப்பலையும், பெரும்பாலான விமானங்களையும் குறிவைக்கக்கூடும்.

பேரணியில் சீனா தனது டி.எ.ஃப் -26 'குவாம் கில்லர்' என்ற இடைநிலை தூர ஏவுகணையை காட்சிப்படுத்தியது. 3,000 முதல் 5,471 கி.மீ தூரத்தில் டி.எ.ஃப் -26 அணு ஆயுத கப்பல் எதிர்ப்புக்கு பயன்படுத்தப்படலாம்.

சீன ராணுவம் ஒரு புதிய மற்றும் மேம்பட்ட ரேடார் அமைப்பையும் அணி வகுப்பில் கொண்டு சென்றது. இது 'ஜெட் மற்றும் ஏவுகணைகளைக் கண்டறிய கூடியது. ஆளில்லா ட்ரோன் தொழில்நுட்ப உபகரணங்களும் தேசிய தின அணிவகுப்பு காட்சியில் பங்கு கொண்டன.

இலங்கை துறைமுகத்தில் சீனா தனது அணு ஆயுதங்களை மறைத்து வைக்கும் ஆபத்து இவ்வாறான நிலையில் ஆசியப்பிராந்தியத்தில் இலங்கையில் நங்கூரம் இட்டுள்ள சீனா இலங்கையில் போர்ட் சிற்றி அமைப்பது தொடர்பில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது அதில் இலங்கைஅரசாங்கத்தால் பிரத்தியேகமாக தெரிவுசெய்யப்பட்ட5 பேர் கொண்ட குழுவே தீர்மானிக்கும் என் உள்ளது ஆகவே அங்கு என்ன நடக்கப்போகிறது என்பது பற்றி இலங்கை புலானாய்வு பிரிவினருக்கு கூட தகவல்கள் தெரியவராத நிலை ஏற்படும் என்பது தான் உண்மைச சீனலங்கா என்று பெயர் வைத்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை சீனா 2019 தனது 70 ஆண்டு சுதந்திர தின விழாவை கொண்டாடியது.

அன்று தம்மிடம் உள்ள சக்திவாய்ந்த அணுஆயுதங்களை காண்பித்தது அதை விடவும் வலிமைகொண்ட ஆயுதங்கள் அவர்களிடம் உள்ளது அதனை பாதுகாப்பாக வைப்பதங்கு இலங்கையை அச்சுறுத்தி தனது நடவடிக்கைகளை மேற்க்கொள்வதற்து இந்த போர்ட் சிற்றி பயன்படுத்தப்படலாம் என்று புலனாய்வு செய்திகள் தெரவிக்கின்றன

நெற்றி பொறியன்






# இலங்கையை கொரோனா வைரசால் கொல்லப்போகும் சீனா!




உலக நாடுகளுக்கு கொரோனாவை ஏற்றுமதி செய்த சீனா தற்பொழுது அதிலிருந்து இலாபத்தை பார்க்க தொடங்கிவிட்டது. ஆசியா உட்பட அனைத்து நாடுகளை சேர்ந்தவர்களும் சீன எல்லைக்குள் வருவதற்கு தடை விதித்திருக்கிறார்கள். ஏனைய நாடுகளை சேர்ந்தவர்கள் சீனர்களுக்கு கொரோனா தொற்றை ஏற்படுத்திடுவார்கள் என்று காரணம் சொல்லுகின்றார்கள். தற்பொழுது பாதிக்கப்பட்ட பல நாடுகளுடன் பேஸ் மாஸ்க், கான்ட் கிளவ்ஸ், வின்டிலேட்டர் போன்ற இயந்திரங்களை உற்பத்தி செய்து அவர்களுக்கு தருவதற்கு பல கோடி ரூபாய்க்கு பேரம் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள்.

சீனர்களின் நரித்தந்திரத்தை பற்றி வெளியில் இருப்பவர்கள் கூறும் பொழுது அதை நம்பாமல் இருப்பது பரவாயில்லை. ஆனால் சீனர்களே சொன்னால்? **1999 ஆம் ஆண்டு அமெரிக்காவை அழிக்க சீனாவின் 2 படைத் தளபதிகள் எழுதிய புத்தகம் தான் அன்ரட் செட்டட் வோட்பாய் அமெரிக்காவை ஒரு நாளும் ஆயுதங்களை வைத்து எங்களால் அழிக்க முடியாது என்று சீன தளபதிகளுக்கு தெரியும். அமெரிக்காவின் பொருளாதாரத்தை அழிப்பது மட்டுமே சீனா அமெரிக்காவை வெல்ல சரியான திட்டம் என்று அந்த புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது.** சுமார் 20 ஆண்டுகள் கழித்து சீனா அந்த புத்தகத்தில் இருப்பதைப் போன்று கொரோனாவை ஒரு ஆயுதமாக பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். கொரோனாவை பயன்படுத்தி உலக பொருளாதாரத்தை சீனா கட்டுப்படுத்தும் முயற்சியில் சீனா இறங்கியிருக்கிறார்கள். இது வெறும் கணிப்பு மட்டும் கிடையாது. சில உதாரணங்கள் இருக்கின்றது. முதலில் தற்பொழுது சீனாவின் நிலை என்ன அனைத்து நாடுகளும் முடங்கியிருக்கும் நிலையில் சீனா தனது சுற்றுலா தளங்களை திறந்து வைத்தது மால்கள் ஹோட்டல்கள் என அனைத்துமே வழமைபோல் திறக்கப்பட்டுவிட்டது.

மக்களின் இயல்பு வாழ்க்கையும் சீனாவில் திரும்பிவிட்டது. பெரும்பாலான தொழிற்சாலைகள் இயக்கத்திற்கு வந்து விட்டது. சீன அரசு 344 மில்லியன் டொலர்களை பொருளாதாரத்தை மீட்க செலவு செய்திருக்கிறார்கள். ஒரு நாடு தன்னை மீட்க எடுக்கும் நடவடிக்கையில் என்ன தவறு இருக்கிறது என்ற ஒரு கேள்வி எழும். இந்த புள்ளிவிபரத்தை பாருங்கள் கொரோனா உருவான சீனாவில் மொத்தமே 81 ஆயிரம் பேர் மட்டும் தான் கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அமெரிக்காவில் இன்று வரைக்கும் 1 இலட்சத்து 64 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தாலியில் 1 இலட்சத்துக்கும் மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேசீனாவில் இருக்கும் பீஜிங்கில் எவ்வளவு பாதிப்பு இருக்கிறது தெரியுமா? 2.15 கோடி மக்கள் வசிக்கும் பீஜிங்கில் வெறும் 569 பேர் மட்டும் தான் கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் வெறும் 8 பேர் மட்டுமே மரணமடைந்தும் இருக்கிறார்கள். சீனாவின் மற்றுமொரு முக்கியமான நகரம் சாங்காய் 2.4 கோடி மக்கள் வசிக்கும் சாங்காயில் வெறும் 468 பேருக்கு மட்டும் தான் கொரேனா தொற்று ஏற்பட்டிருக்கிறது. அதில் வெறும் 5 பேர் தான் மரணமடைந்திருக்கிறார்கள். உலகிலே மிக நெருக்கமான மக்கள் தொகையுடனான இடங்களில் சாங்காயும் ஒன்று. அந்தஇடத்தில்எவ்வாறுஇவ்வளவு குறைவான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அமெரிக்காவில் அனைத்து மாகாணங்களிலுமே கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வுகானில் இருந்து அண்டை மாவட்டங்களுக்கு பரவுவதை சீனா எவ்வளவு அழகாக கட்டுப்படுத்தினார்களோ அதே மாதிரி மற்றைய நாடுகளுக்கும் பரவுவதை கட்டுப்படுத்தியிருக்கலாமே. தன்னுடைய எல்லைகளை முதலிலே சீனா ஏன் கட்டுப்படுத்தவில்லை. சீனாவில் பாதிப்பு ஏற்பட்ட நகரங்கள் என்று பட்டியல் எடுத்து பார்க்கும் பொழுது சீனாவின் பொருளாதார மண்டலங்கள் அனைத்துமே பத்திரமாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது. முக்கிய நகரங்களுக்கு எந்த பாதிப்புமே இல்லாமல் சீனா எப்படி பார்த்தது.



இது எப்படி சாத்தியமானது இந்த கேள்வி மனதில் ஒருபக்கம் இருந்துகொண்டே இருக்க சீனா மற்றுமொரு விடையை சரியாக நமக்கு கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த கொரோனா சூழ்நிலையை சீனா தனக்கு சாதகமாக எப்படி பயன்படுத்துகின்றார்கள் தெரியுமா? உலக நாடுகளுக்கு இப்போது என்ன தேவை பேஸ் மாஸ்க், கான்ட் கிளவ்ஸ், வென்டிலேட்டர் மற்றும் சானிடைசர்ஸ் அதை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் தான் தற்பொழுது சீனா களமிறங்கியிருக்கிறது.


ஒரு புள்ளிவிபரம் இருக்கின்றது 2020 ஆம் ஆண்டு ஜனவரி பெப்ரவரி காலத்தில் மட்டும் சீனாவில் 8950 புதிய மாஸ்க் செய்யும் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் ஒரு நாள் உற்பத்தி எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட 116 மில்லியன் டோன் பொலிமர் இது தான் மிகவும் பெரிய தொழிற்சாலையாகும். சீனாவின் மாஸ்க் செய்யும் பங்குகளில் கிட்டத்தட்ட 40 சதவீதமான பங்கு இவர்களிடம் தான் இருக்கிறது. இந்த தொழிற்சாலை தான் உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு மாஸ்க் செய்யும் மூல பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. இந்தியாவிலும் மாஸ்க் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் அதற்கான மூல பொருட்களை சீனாவிலிருந்து தான் வாங்கிக்கொண்டு இருக்கின்றோம்.

கொரோனா ஏற்பட்ட இந்த காலகட்டங்களில் உலகின் அனைத்து பொருளாதாரமும் கீழே விழுந்துகொண்டிருக்கின்ற நிலையில் இந்த தொழிற்சாலையினுடைய இலாபம் எவ்வளவு தெரியுமா 417 சதவீதம் இந்த தொழிற்சாலைகளுக்க இலாபம் அதிகரித்திருக்கிறது. கொரோனா வைரஸ் என்பது கிட்டத்தட்ட 9 ஆயிரத்தி சொச்சம் நிறுவனங்களுக்கு மட்டும் தான் நல்ல செய்தியாக இருக்கிறது. ஏற்கனவே சீனாவிலிருந்த தற்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் அனைத்து நிறுவனங்களும் உலக நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களுடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கான்ட் சானிடைசர்ஸ், மாஸ்க்ஸ், கிளவ்ஸ், வின்டிலேட்டர் போன்ற இயந்திரங்களை தயாரித்து விற்பனை செய்ய பலகோடி டொலர்களுக்கு அக்ரிமன்ட் சைன் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வணிகத்தை ஆளுமை செய்வது ஒருபக்கம் இருந்தாலும் இன்னும் ஒரு பக்கம் பொருளாதாரத்தை கைப்பற்றுவது அந்த வகையில் உலகம் முழுவதும் இந்த காலகட்டத்தில் பல நிறுவனங்கள் நஷ்டத்தில் இருக்கிறது. அந்த நிறுவனங்களை விலைகொடுத்து வாங்க சீனா தொடங்கிவிட்டார்கள்.

அவுஸ்ரேலிய அரசு தற்பொழுது பயந்துகொண்டிருக்கிறார்கள். சீனா பல மில்லியன் டொலர்களை தற்பொழுது அவுஸ்திரேலியாவிலுள்ள நிறுவனங்கள் மீது முதலீடு செய்தார்கள். இதுவொரு காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவின் மொத்த பொருளாதாரமுமே சீன நிறுவனங்களின் கையில் போய்விடுமோ என்ற பயத்தில் தற்பொழுது அவுஸ்திரேலிய அரசு இருக்கிறது. சீனாவின் நிறுவனங்களை தாண்டி சீன எல்லைக்குள் இருக்கும் ஏனைய நாடுகளின் நிறுவனங்களுமே பெப்ரவரி மாதமே இயங்க தொடங்கிவிட்டார்கள். **BMW, fiat, Foxconn** மற்றும் **Tesla** போன்ற நிறுவனங்கள் அனைத்துமே சீன அரசின் உதவியுடன் இயங்க தொடங்கிவிட்டார்கள். தற்பொழுது சீனாவின் உற்பத்தி ஏனைய நாடுகளை விட அதிகரித்திருக்கிறது. தற்பொழுது எங்காவது ஒரு இடத்தில் டிமான்ட் என்றால் அது சீனாவில் இருந்து தான் போக வேண்டும். தன்னுடைய நாட்டில் ஏற்பட்ட தொற்றை அந்த நாட்டுக்குள்ளேயே கட்டுப்படுத்தாமல் ஏனைய நாடுகளுக்கு பரப்பி அதற்கு தேவையான மருத்துவ பொருட்களை அவர்களே உருவாக்கி அதை ஏனைய நாடுகளுடன் விலைபேசி வியாபாரம் செய்வதை தந்திரம் என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்லமுடியும். சீனா மற்றுமொரு முறை தன்னை நிரூபித்துவிட்டார்கள்.

**நெற்றி பொறியன்**

# நவீன சீனாவை உருவாக்க பாடுபட்ட தலைவர்கள்-சீனா ஆபத்தானது சீனாவை அழிப்பதே சிறந்தது




உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. மேலும், சீனா உலகின் இரண்டாவது பெரிய சக்தியாக மாறியுள்ளது. 1990 ஆம் ஆண்டுக்கு முன்பெல்லாம், சீனா எம்மை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடாகவே இருந்தது. ஆனால் மிகவும் வேகமாக வளர்ந்த சீனா, இப்போது அமெரிக்காவுடன் வர்த்தகப் போரில் நேருக்கு நேராக உள்ளது. சீனாவை இந்தளவிற்கு மாற்றிய தலைவர்கள் பற்றி எத்தனை பேர் தெரிந்து வைத்துள்ளீர்கள்? இந்த தொகுப்பை படித்து தெரிந்துகொள்ளுங்கள்.

### மாவோ சேதுங்

1950களில், கம்யூனிசம் உலகை ஆண்டபோது, மாவோ சீனாவுக்கு ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவார் என்று சீன மக்கள் நம்பினர். ஆனால் மாவோ அதில் தோல்வியடைந்தார். மாவோவின் சோசலிச சோதனைகளின் விளைவாக மில்லியன் கணக்கான மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டனர். ஆனால் சீன மக்கள் குடியரசு என்று அழைக்கப்படும் நாட்டை தொடர்ந்து பாதுகாக்க மாவோவால் முடிந்தது. மேலும், மாவோவின் கம்யூனிசத்தின் எச்சங்கள் இன்றும் சீனாவில் காணப்படுகின்றன. மாவோ தனது வாழ்நாளில் சீனாவை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு வர முடியவில்லை. ஆனால் மாவோவுக்குப் பின் வந்த டெங் சியோபனால் எளிதில் மாற்றக்கூடிய ஒரு கம்யூனிச மதப்பிரிவின் அமைப்பை மாவோ சீனாவுக்குக் கொடுத்தார். சில பின்னடைவுகள் இருந்தபோதிலும், மாவோ சேதுங் இன்னும் சீனாவின் மீட்பராகவே காணப்படுகிறார்.

### டென் சியோபன்

"பூனை வெள்ளையாக அல்லது கருப்பாக இருப்பது அவசியமில்லை, அது ஒரு எலியைப் பிடிக்குமானால் அதுவே சிறந்த பூனை", என்கிற ஒரு கருத்தை டெங் கூறியுள்ளார். டெனின் செயல்களும் அப்படித்தான். டென் சீனாவின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ அவரது கதாபாத்திரத்திற்கான சக்தியையும் தாண்டி, சீனாவை ஆட்சி முறைப்படி ஆட்சி செய்த ஒரு மேதை. மாவோவுக்குப் பிறகு சீனாவில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரானார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுடனான சீனாவின் உறவை மேம்படுத்தினார். டெங் சியோபன் ஆட்சிக்கு வந்தபோது ஷென்சென் ஒரு சிறிய மீன்பிடி கிராமமாக இருந்தது. இன்று, டெங்கின் பொருளாதாரக் கொள்கைகளின் பின்னால் ஷென்சென் போன்ற புதிய நகரங்கள் சீனாவில் முளைத்து, உலகிற்கே சவால் விடுகின்றன. மறுபுறம், டெங் சியோபன் கம்யூனிச கட்டமைப்பைக் காத்து அதன் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கவும், பின்னர் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மூலம் சீனாவை உலகுக்குத் அறிமுகம் செய்யவும் பணியாற்றினார். மாவோவின் காலத்தில் சரிந்திருந்த சீன கல்வியை வெளிநாடுகளில் உயர்த்தவும் டென் பணியாற்றினார்.

### ஸீ ஜின்பிங்

ஸீ ஜின்பிங் நல்லவரா அல்லது கெட்டவரா என்று சொல்வது மிக விரைவில் வரும். ஜின்பிங் சீனாவின் ஏகாதிபத்திய முகத்தை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். 2012 ல் ஆட்சிக்கு வந்த ஜின்பிங் தனது கட்சியின் தலைமையையும் சீன இராணுவத்தின் தலைமையையும் ஏற்றுக்கொண்டார். 2019-2020 காலம் என்பது சீன பொருளாதாரம் 30 ஆண்டுகளில் அதிகப்படியான வீழ்ச்சியடைந்த ஒரு ஆண்டைக் குறித்தது. ஜின்பிங்கின் பல வெளிநாட்டு திட்டங்களினால் சீனா எதிர்பார்த்த அளவுக்கு பயனடையவில்லை என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். அதுவரை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுடன் இருந்த நல்லெண்ணம் ஜின்பிங்கின் ஆட்சிக் காலத்தில் சில பின்னடைவுகளைச் சந்தித்தது. இருப்பினும், ஜின்பிங் சீனாவில் உள்நாட்டு ஊழலைக் குறைத்து, சில உயர் அதிகாரிகளை கூட சிறைக்கு அனுப்பினார் மற்றும் ஊழலுக்கான தூக்கு மேடை. தன்னிடம் உள்ள முழு சக்தியைப் பயன்படுத்தினாலும், ஜின்பிங்கின் காலத்தில் சீனா முன்னேறுமா என்பது தான் இப்போதைய கேள்வி.

### ஹூ ஜிந்தாவோ

2002-2012 வரை நாட்டை ஆண்ட ஹீ ஜிந்தாவோ ஒரு பொறியியல் பட்டதாரி. இப்போது சீன அரசியலில் இருக்கும் ஜின்பிங் மற்றும் அவரது முன்னோடிகளான ஜியாங் ஜெமின் மற்றும் ஹீ ஜிந்தாவோ அனைவரும் பொறியியல் படித்தனர். சீனாவின் பொருளாதார வளர்ச்சியை தொலைதூர சீனாவுக்கு விரிவுபடுத்த ஹீ ஜிந்தாவோ முயன்றார். நகரங்கள் மற்றும் பொருளாதார மண்டலங்களுடன் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்ட சீனாவின் பொருளாதாரத்தை சீனா முழுவதும் பரப்ப அவர் ஆரவங்காட்டினார். அவர் சீனாவில் இருந்த காலத்தில், அதிவேக ரயில் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள் செழித்து வளர்ந்தன. 2000 ஆம் ஆண்டு வரை அதிவேக ரயில் தொழில்நுட்பத்தைப் பற்றி அதிகம் தெரியாத சீனாவில் இப்போது சுமார் 35,000 கி.மீ தூர அளவிற்கு கூட அதிவேக ரயில்வே உள்ளது. கம்யூனிச ஆட்சியின் போது லஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்க ஹீ ஜிந்தாவ் பணியாற்றினாலும், அது அவ்வளவாக வெற்றிபெறவில்லை.

### ஹீ ஜோபன்

ஒரு கம்யூனிச நாட்டின் பொருளாதார பகுதி மட்டுமே உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டபோது, சீனாவிலும் குழப்பம் ஏற்பட்டது. ஹீ யோபன் என்பவர் சீன வரலாற்றிலிருந்து அழிக்கப்பட்ட ஒரு கதாபாத்திரம். ஹீ ஜோபன் ஒரு கம்யூனிஸ்டு சீனாவை தாண்டி மிகவும் மனிதாபிமான சமூக ஒழுங்கை விரும்பினார். டெங் சியாவோப்பிங்கின் சீன மாற்றத்தில் வலது கை மனிதரான அவர் 1982 இல் சீனாவின் ஜனாதிபதியானார். ஹூவின் திட்டம் மக்களை கவர்ந்த போதிலும், அது சீன கம்யூனிச ஆட்சியை ஈர்க்கவில்லை. திபெத்தும் ஏற்கனவே பதற்றமடைந்த யுகர்களும் தனித்தனியாக ஆட்சி செய்ய சுதந்திரம் இருப்பதாக ஹீ நம்பினார். கம்யூனிச ஆட்சியாளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மற்றும் அவர்களின் வருவாய் மற்றும் குழந்தைகளின் வருவாய் கேள்விக்குள்ளாக்கப்பட்ட ஒரு பின்னணியையும் ஹீ உருவாக்கினார். ஒரு கம்யூனிச நாட்டில் ஒரு மாற்றத்தை உருவாக்குபவர் இருக்க வேண்டும் என்று அவர் 1987 ல் ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது. 1989 ல் அவர் திடீரென மாரடைப்பால் இறந்தார். டெங் சியாவோபிங் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அவரது உடலை அரசமரியாதைகளுடன் அடக்கம் செய்ய தயங்கியது. மேலும், அதுவரை சீனாவில் மாணவர் போராட்டங்கள் ஹூவின் மரணத்துடன் தியனன்மென் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டங்களாக தீவிரமடைந்தது. 2012 இல் ஹூவின் 100 வது பிறந்த நாள் வரை, சீன வரலாற்றில் ஹூவின் பெயர் சீனாவில் ஒரு குழப்பமான நபராக கருதப்பட்டது.

### ஜியான் செமின்

1989 ஆம் ஆண்டு தியனன்மென் சதுக்கத்தில் நடந்த ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்பட்டது என்றாலும், டெங்கின் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சமூகத்தில் ஓரளவு எதிர்ப்பு இருப்பதாக சீன ஆட்சியாளர்கள் கருதினர். அதன்படி, சீனாவின் அப்போதைய ஆட்சியாளர் டென் சியோபன், சீனாவிற்கு இளைய தலைமையை கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். அதன்படி, 1989 ல் ஷாங்காயில் மிகவும் அமைதியான போராட்டங்களை ஏற்பாடு செய்த ஜியான் செமின் விரைவாகவும் கம்யூனிஸ்ட் கட்சியின் உச்சத்திற்கு சென்றார். ஜியான் செமின் சீனாவின் முதல் இராணுவமற்ற ஆட்சியாளராக வெளிப்பட்டார். ஷாங்காயில் இருந்து வந்த நிசாடோ ஜியான் செமின் ஷாங்காயில் உள்ள தனது நண்பர்களுக்கு அரசியலில் அதிக நன்மைகளை வழங்கினார். ஜியான் சர்வதேச சமூகத்துடனான தனது நடவடிக்கைகளை மெதுவாக்கி, புதிய சிறப்பு பொருளாதார மண்டலங்கள், சென்சேஷன், ஜியாமென், சாண்டோ மற்றும் சுஹாய் ஆகியவற்றை உருவாக்க முன்னோடியாக இருந்தார்.


### சீனாவின் தலைமை

இன்று சீனாவில், நம் ஜி ஜின்பிங் பல அதிகாரங்களைக் கொண்டுள்ளார். ஆனால் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வலிமையானவர்களுக்கு சீன அரசியலில் இன்னும் பெரும் ஆற்றல் உள்ளது. மாவோ சேதுங் தனது எல்லா சக்திகளையும் பரிசோதித்த போதிலும், அடுத்து வந்த வெற்றிகரமான தலைவரான டெங் சியோபன் பலதர்ப்பைட்ட தலைமையும் ஏற்றுக்கொண்டு செயல்களில் முற்படவில்லை. டெங் சியோபன் கட்சித் தலைமையைக் காத்து, மற்றவர்களை தனது வேலையைச் செய்ய வைக்க முயன்றார். இதன் விளைவாக, தியனன்மென் சதுக்கம் போன்ற சந்தர்ப்பங்களில் அவருக்கு பின்னடைவு ஏற்பட்டது. சீன அரசியலில் உள்ள காரணிகள் மற்ற நாடுகளைப் போல உலகுக்குத் திறந்தவை அல்ல. ஆனால் இன்று சீன கம்யூனிச அமைப்பு பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு வசதியான பொருளாதார மற்றும் சமூக சூழலை உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது.

சீனாவை ஒட்டிய பெரிய நாடாக இருக்கும் இந்தியா சுதந்திரத்திற்குப் பிறகு பிளவுபட்டது. இன்று, 300 மில்லியனுக்கும் அதிகமான இந்தியர்கள் தீவிர வறுமையில் வாழ்கின்றனர். மிகவும் அர்ப்பணிப்புள்ள சீன மக்களாலும் மிகவும் அர்ப்பணிப்புள்ள சீன ஆட்சியாளர்களாலும் மாத்திரமே வெறும் முப்பது முதல் நாற்பது ஆண்டுகளுக்குள் கற்பனை செய்ய முடியாத விகிதத்தில் சீனாவை உருவாக்க முடிந்துள்ளது. அதே நேரத்தில், இனவெறி அமைதியின்மை போன்றவை இன்றிய ஒரு பெரிய நாடாக சீனா ஒரு வலுவான நிலைக்கு உயர முடிந்தது. இது நம் நாட்டிலும் முடிந்தால் சாத்தியமாகும், நம் நாட்டையும் மாற்ற முடியும்.

சுழியோடி

# இலங்கையில் ஈழராஜ்யத்தை அமைக்க இந்தியா அமெரிக்கா எச்சரிக்கை!



உலக அரசியலை பொறுத்தவரையிலும் உள்ளூர் அரசியலைப் பொறுத்தவரையிலும் என்ன இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதில் பலரதும் அவதானம் உற்று நோக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஒருபுறம் மறுபுறத்தில் ஒவ்வொரு நாடுகளும் குறித்த நாடுகளிடையே எவ்வாறான பிரச்சனைகளை உருவாக்குவதுஅதில்எப்படிகுளிர்காய்வது என்ற ஒரு பூகோள அரசியல் தற்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இதிலே ஆரம்பத்தில் கொரோனா வைரஸை உருவாக்கிய சீனா நாடு முழுவதும் வைரஸை பரப்பி அதனூடாக வர்த்தக வியாபாரங்களை அவர்கள் பலப்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். கிட்டத்தட்ட 50 நாடுகளுக்கு அவர்கள் தங்களுடைய உற்பத்தி பொருட்களை விற்பனை செய்துவருகின்றார்கள்.

ஆகவே இந்த பூகோள அரசியலுக்குள் இலங்கையும் மாட்டிக்கொண்டிருந்தது. ஆனால் தற்பொழுது நிரந்தரமாகவே சீனாவினுடைய காலணிக்குள் இலங்கைத்தீவு பறிபோய்விட்டது என குறிப்பிடலாம். இலங்கைத்தீவு பறிபோயுள்ள நிலையிலே இதனை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்பட இருப்பதாக இரகசிய புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமல்லாது இந்தியாவும் இலங்கையும் பாரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. ஒரு கட்டத்தில் கச்சைதீவு கூட இனி சீனாவிடம் பறிபோக வாய்ப்புள்ளது. இரணைதீவில் ஒரு பகுதியை இலங்கை அரசு சீனாவிற்கு கொடுக்க தயாராக இருக்கின்றது. அவ்வாறிருக்கும் பொழுது இந்த ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே சீனாவினுடைய ஆதிக்கம் என்பது நீண்டதூர இலக்கை கொண்டதாக அமைந்திருக்கிறது. ஒருவகையில் சொல்லப்போனால் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை மழுங்கடிக்கின்ற வகையிலே இந்த சர்வதேச நாடுகள் ஈடுபட்டதை எண்ணி தற்பொழுது அவர்கள் கவலைப்படுகின்றனர்.

சீனாவைத் தவிர ஏனைய நாடுகள் ஏன் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை நாம் அழித்தொழிப்பதற்கு இடமளித்தோம் என்று கவலைப்படுகின்றனர். சீனாவை பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் இந்த நாட்டிலிருந்தால் தாங்கள் நிரந்தரமாக கால் பதிக்க முடியாது என்ற நிலை அவர்களுக்கு இருந்தது. இன்றைய அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால் இந்தியாவிற்கு இலங்கையினுடைய கடற்பிராந்தியம் உட்பட நிலம் தொடர்பிலான பகுதிகளும் அவர்களுக்கு அத்தியாவசியப்படுகிறது. தற்பொழுது இந்தியாவினுடைய பல இறக்குமதிகள் வியாபாரம் சம்பந்தமான இறக்குமதிகளை இலங்கை அரசு தடை செய்திருக்கின்றது. அமெரிக்கா தான் நினைத்தபடி இலங்கையை கையாள முடியவில்லை என்ற ஒரு ஆதங்கமும் அவர்களுக்கு இருக்கிறது. ஒரு தமிழினப்படுகொலை இந்த நாட்டிலே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது அதனூடாக இந்த நாட்டிலிருக்கின்ற ஜனாதிபதியினுடைய அதிகாரத்தை மட்டுப்படுத்தலாம் என்ற அல்லது அவர்களை வேறு திசைக்கு திருப்பலாம் என்ற இந்தியா மற்றும் அமெரிக்காவினுடைய நட்பாசை தற்பொழுது தவிடுபொடியாக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இந்த கொழும்பிலே வழங்கப்பட்ட போர்ட்சிட்சி சம்பந்தமாக முக்கியமாக இலங்கையிலே கேந்திர முக்கயத்துவம் வாய்ந்த ஒரு பொருளாதார மத்திய நிலையமாக இந்த போர்ட்சிட்டி அமையப்பெற்றிருக்கின்றதில் மாற்றுக்கருத்தில்லை. தற்பொழுது அனைத்து கலை கலாச்சாரத்தை பொறுத்தவரையிலே சீனாவிலுள்ள கலை கலாச்சாரங்கள் திணிக்கப்படுகின்றன. அவர்கள் இங்கு வந்து தமிழையும், சிங்களத்தையும் கற்றுக்கொண்டு அவர்களுக்கு அவர்களே அங்கு தனி வானொலிகளை திறந்திருக்கிறார்கள். தனி தொலைக்காட்சிகளை திறந்திருக்கிறார்கள். இன்னும் பல தொலைக்காட்சி சனல்களை விலை கொடுத்து வாங்கும் அளவிற்கு அவர்களுடைய பொருளாதாரம் இருக்கின்றது என்றால் அதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆகவே ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும். சீனாவினுடைய பொருளாதார நகர்வு என்பது ஒரு நாட்டுக்குள் கடன் சுமையை சுமத்தி அந்த கடனினூடாக அவர்கள் குளிர்காய்ந்து அந்த கடனை கட்டாது போனால் அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே எந்தவொரு நாடும் தம்மை தாக்காத வகையில் அவற்றை தமது கைப்பைக்குள் போட்டுக்கொள்வது தான் இவர்களின் நீண்டகால திட்டமாக இருக்கின்றது. அந்த வகையில் இலங்கையில் இருக்கின்றவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்ற வகையில் பார்த்தாலும் கூட சீனாவை பொறுத்தவரையில் அது நிறைவு கண்டிருக்கின்றது. அதே நேரம் அமெரிக்காவும் இந்தியாவும் போரியல் ரீதியாக பாரிய தோல்வியை கண்டிருக்கின்றது. அவர்கள் பாரிய நிலைப்பாட்டில் இருந்து அவர்களுடைய நிலைமை மிக மோசமாக சென்றுகொண்டிருக்கின்றது. சீனாவை எதிர்க்கக்கூடிய ஒரு சூழல் இவர்களுக்கு இல்லையென்ற ஒரு நிலைப்பாடு இருக்கின்றது. காரணம் என்னவென்றால் கொரோனா வைரஸை பரப்பிய சீன அரசாங்கத்தின் மீது உலக நாடுகளோ சுகாதார ஸ்தலங்களோ எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

ஆகவே இவர்கள் மிக ஆபத்தானவர்கள். இந்த நாட்டில் ஆபத்தான வைரசுகள் இருக்கிறது என்பதை கண்டறிந்தே இவர்களுக்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் அல்லது இவர்களுடைய பொருளாதாரத்தை மட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாடுகளும் இவர்களின் வியாபார வணிக வர்த்தகங்களை முடக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளை இது வரையும் மேற்கொள்ளவில்லை. காரணம் என்னவென்றால் அந்த வைரஸை கூடுதலாக சீனா ஒவ்வொரு நாடுகளிலும் கால் பதித்திருக்கிறது. அவர்களூடாக இந்த வைரஸை பரப்பி தங்களின் நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் நாட்டை அழிக்கக்கூடிய வல்ல வைரஸை கூட பரப்பிவிட முடியும் என்ற பயம் இவர்களுக்கு இருக்கின்றது. இலங்கை அரசும் கூட ஒரு கொத்தடிமையாக அதாவது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்களும் தற்பொழுது சீனாவின் கொத்தடிமைகளாகவே அவர்கள் ஒரு நடைப்புண அரசியலையே செய்துவருகின்றார்கள். இந்த அரசியல் மாற்றம் உண்மையில் இந்த நாடு சீனாவிற்கு விற்கப்படுகின்றது என்பதை சிங்கள மக்களும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். விற்கப்பட்டு விட்டது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் ஒரு நாட்டை சர்வதிகார ரீதியாக தனது பொருளாதாரத்தை திணித்து இந்த நாட்டின் சுய தொழினுட்ப பொருளாதாரத்தை அவர்கள் மேம்படுத்த அவர்களுக்கு விருப்பமில்லை. ஆகவே நாங்கள் அதற்கான காப்பரண்களை இலங்கை அரசு நிரூப வேண்டிய தேவை இருக்கிறது. அந்த காப்பரண்களை நிரூபாவிட்டால் நிச்சயமாக அடுத்தகட்ட ஆபத்தில் நாங்கள் மூழ்க வேண்டிய சூழல் உருவாகும்.

ஆகவே பூகோள ரீதியாக அரசாங்கங்கள் ஒன்றையொன்று மோதுகின்றமை வழமையானதொன்று. ஆனால் அதில் எங்களுடைய நாட்டை பாதுகாக்கும் சூழலை நாங்கள் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இந்தியா தனது சுயநலத்தை பார்க்கின்றது. அமெரிக்கா தனது சுயநலத்தை பார்க்கின்றது சீனா இந்த நாட்டுக்குள் நுழைந்துவிட்டது. ஆகவே சீனர்களை விரட்டியடிக்கின்ற ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் தனித் தமிழீழத்தை இந்த அமெரிக்காவும் மற்றும் இந்தியாவும் இணைந்து இந்த நாட்டில் ஒரு தனி தமிழீழத்தை உருவாக்கும் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை. காரணம் என்னவென்றால் அந்த நிலைப்பாடு நிச்சயம் அவர்களுக்கு தேவை. தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் எந்தவொரு நாட்டினுடைய கப்பல்களோ அல்லது எந்தவொரு நாட்டினுடைய வணிகங்களோ இந்த நாட்டில் தவிடுபொடியாக்கப்பட்டவை. சர்வதேச கடற்பரப்பில் கூட நிலையான தமது தனித்துவத்தை அவர்கள் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் சீனாவினுடைய நிலைப்பாடு என்னவென்றால் தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் இருப்பார்களாக இருந்தால் அவர்கள் இலங்கைத்தீவிலே தாங்கள் நினைத்தவாறு எதையுமே சாதித்துவிட முடியாது என்ற நிலைப்பாடு இருந்தது. ஆகவே இந்த நாட்டுக்குள் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த பொழுது இந்தியாவினுடைய ரோ சாரி விற்பனைக்காக 1500க்கும் மேற்பட்டவர்கள் இங்கு களமிறக்கப்பட்டார்கள் தங்களுடைய புலனாய்வுக்காக. தமிழீழ விடுதலைப்புலிகள் இதனை கண்டறிந்து சாறி விற்பனை செய்யும் அனைவரையும் கண்டறிந்து இலங்கையில் இருந்து விரட்டியடித்தார்கள். ஒரு பிச்சைக்காரனைக்கூட வீதியில் நடமாட விடவில்லை. அந்த பிச்சைக்காரனுக்கான ஒரு இடத்தை தயார்படுத்தி அங்கே அவர்களுக்கு தொழில்நுட்பங்களை கற்றுக்கொடுத்து அங்கு வேலைவாய்ப்புக்களை கொடுத்து அந்த தோட்டத்தை பராமரித்து அங்கு வாழ்வதற்கான நடவடிக்கைகளை செய்தார்கள். பிச்சைக்காரர்களும் கூட பலர் இங்கு உள்நுழைந்திருந்தார்கள்.


ஆகவே இந்த வியாபார நோக்கில் வந்த இந்தியர்கள்கூட இறுதியில் எடுத்த தரவுகளை எடுத்து இந்தியாவிற்கு கொடுத்தார்கள். இந்தியா அதனை வைத்து தான் எந்தெந்த இடங்களில் எவ்வாறான தளங்கள் செயற்படுகின்றது என்பதனை அறிந்து இராணுவ நடவடிக்கையானது இலங்கை அரசுடன் இணைந்து மேற்கொண்டது. ஒவ்வொரு அரசாங்கங்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த நாட்டுக்குள் நுழைவதற்கு மிகவும் ஒரு இக்கட்டான சூழலை கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த நாட்டில் கிளர்ச்சி ஏற்பட வேண்டும். சீன காலணித்துவத்திற்கு எதிராக கிளர்ச்சி இந்த நாட்டிலே நிச்சயமாக உருவாக்கப்பட வேண்டும். இலங்கையிலே கிளர்ச்சி உருவாக்கப்படுவது இலங்கை அரசுக்கு பாரியதொரு விடயமல்ல. அதற்கு ஏற்ற போராளிகள் கூட தற்பொழுது இராணுவத்தினரின் கஷ்டடியில் தான் இருக்கின்றார்கள். போராட்ட தளபதிகளும் இருக்கிறார்கள். இவர்களுடனும் கலந்தாலோசித்து மறு முனையில் சீனாவை எவ்வாறு எதிர்க்க வேண்டும் என்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாகவே இந்த சீன காலணித்துவத்தை இந்த நாட்டிலிருந்து அப்புறப்படுத்த முடியும்.

**நெற்றிப்பொறியன்**



# பிராந்தியச் செய்திகள்



## மிக அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே வாகனங்களுக்கு அனுமதி: யாழ். அரச அதிபர்

பயணத்தடையின்போதுமிகஅத்தியாவசியத்தேவைகளுக்குமாத்திரமேவாகனங்களுக்கு அனுமதி வழங்க வடக்கு மாகாண கொரோனாத் தடுப்பு செயலணி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.



வடக்கு மாகாண கொரோனா தடுப்புத் செயலணியின் கூட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு மாகாண கொரோனாத் தடுப்பு செயலணி யினுடைய விசேட கூட்டம் அன்று காலை ஆளுநர் தலைமையில் சூம் செயலி மூலம் இடம்பெற்றிருந்தது. தற்போதுள்ள மாகாண நிலைமைகள், யாழ்.மாவட்ட நிலைமைகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல் வடக்கு வைத்தியசாலைகளில் உள்ள நிலைமைகள், தேவைகள், வைத்திய உபகரணங்கள் தேவைப்பாடுகள், ஒட்சிசன் சிலிண்டர் தேவைப்பாடுகள் மற்றும் வைத்தியசாலைகளின் வசதிகள் போன்ற குறைபாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அதனுடைய குறைபாடு நிவர்த்தி செய்வதற்குரிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

குறிப்பாக வடக்கு மாகாணத்திலிருந்து அதிகளவான வாகனங்கள் வெளியேறுவதன் காரணத்தால் பயணத் தடைகாலத்தின்போது மிக அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே வாகனங்களுக்கு அனுமதி வழங்குமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தல் மிக விரைவில் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது.அதே நேரத்தில் கடல் மார்க்கமாக எல்லை மீறிப் பிரவேசிப்பது தொடர்பிலும் இங்கே ஆராயப்பட்டுள்ளது" என்றார்.

## கிளிநொச்சியில் இரு நாட்களில் 64 பேருக்கு கொவிட் தொற்று

கிளிநொச்சி மாவட்டத்தில் வெளிவந்த பி.சி.ஆர். முடிவுகளின்படி 64 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.




கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை, அறிவியல் நகரில் உள்ள பழச்சாறு உற்பத்தி நிறுவனம் மற்றும் சாந்தபுரம் கிராமத்திலேயே இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் தொற்று ஏற்படுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் சுகாதார நடைமுறைகளைக் கவனத்தில் எடுத்து நடந்து கொள்ளாதவர்கள் என்றே கூறப்படுகின்றது.

நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் தொற்றைக் கட்டுப்படுத்த மக்கள் சுகாதார விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் 3 சிறுமிகள் உட்பட 47 பேருக்கு கொரோனா தொற்று

சண்டிலிப்பாய், நல்லூர், காரைநகர், சங்கானை, பருத்தித்துறை, தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரிகளின் பிரிவுகளாக யாழ்ப்பாணத்தில் (2021.05.28) 47 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.




இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 11 வயது சிறுமி, 14 வயது சிறுமிகள் இருவர், 19 வயது இளைஞர் ஒருவர், 20 வயது இளைஞர்கள் ஐவர், 21வயது யுவதி ஒருவர், 24 வயது இளைஞர் ஒருவர் உட்பட்ட 19 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று தெரியவந்துள்ளது.

இதுதவிர, நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேரும், காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேரும் சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேரும்,பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவில் மூவரும், தெல்லிப்பழை மருத்துவஅதிகாரி பிரிவில் இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்றும் தெரிய வருகின்றது.

## யாழ். மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டின் அடுத்த கட்டம் யாழ்ப்பாணம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அன்று (30) தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருநாகல், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் **SINOPHARM** தடுப்பூசி ஏற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இதனிடையே மேல் மாகாணத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாக 05 இலட்சம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளதுடன், ரஷ்யாவின் 50,000 ஸ்புட்னிக் தடுப்பூசிகளும் கிடைத்துள்ளன.

## தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் பொதுமக்களை துன்புறுத்தவேண்டாம் -பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் பொதுமக்களை துன்புறுத்தவேண்டாம் என பொலிஸ்மா அதிபர் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் போதும் பொதுமக்களை துன்புறுத்தும் அவமானப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என பொலிஸாரை கேட்டுக்கொண்டுள்ள பொலிஸ்மா அதிபர் சிடி விக்கிரமரட்ண அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் உயர் அதிகாரிகளிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



கொரோனா வைரசிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார் பொதுமக்களை அவமதிக்கும் விதத்தில் நடந்துகொள்வதை காண்பிக்கும் வீடியோக்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகளுடனான இணையவழி கலந்துரையாடலில் சில பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்துள்ள பொலிஸ்மா அதிபர் அவ்வாறான நடவடிக்கைகளை தடுக்குமாறு சிரேஸ்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார். சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் மத்தியில் பொலிஸாருக்கு உள்ள நற்பெயரிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொள்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களையும் வாகனங்களையும் சோதனை செய்யலாம் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுபவர்களிற்கு எதிராக மாத்திரம் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என பொலிஸ்மா அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பொதுமக்களின் நடவடிக்கைகளே போக்குவரத்து கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதை தீர்மானிக்கும் - பொலிஸ்பேச்சாளர்

எதிர்வரும் நாட்களில் பொதுமக்களின் நடவடிக்கைகளே போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதை தீர்மானிக்கும் என பொலிஸ்பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள போக்குவரத்து கட்டுப்பாடுகளை பொதுமக்கள் பின்பற்றினால் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டால் 8 ம் திகதி கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து கட்டுப்பாடுகளிற்கு மத்தியில் கொரோனா கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டால் போக்குவரத்து கட்டுப்பாடுகள் நீடிக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். அடுத்த சில நாட்களிற்கு மருந்தகங்களை மாத்திரம் திறக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். கடைகளை திறக்க அனுமதிக்கமாட்டார்கள் பொதுப்போக்குவரத்தும் இடம்பெறாது என அவர் தெரிவித்துள்ளார்.






## நயன்தாரா, காஜல், சமந்தா என நடிகைகளின் புதிய சம்பள பட்டியல் – முழு விவரம்

இந்திய சினிமா முன்பை போல இப்போது இல்லை. எல்லா விஷயத்திலும் பெரிய அளவில் மாற்றம் அடைந்துள்ளது. தரத்திலும் உயர்ந்துள்ளது.

பெரிய பட்ஜெட் படம், ஹாலிவுட் தரத்தில் தொழில்நுட்ப கதைகள் என சினிமா எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது. நாயகர்களை போல நடிகைகளும் பெண்களுக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளாக தேர்வு செய்து நடித்து சாதனை படைக்கின்றனர்.

நடிகர்களுக்கு இணையாக வசூல் படங்களை கொடுத்து கெத்து காட்டி வருகிறார்கள்.

சரி தற்போது முன்னணியில் இருக்கும் நடிகைகள் ஒரு படத்திற்கு எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் என்ற முழு பட்டியலை பார்ப்போம்.

நயன்தாரா- ரூ. 4 முதல் 5 கோடி
சமந்தா- ரூ. 3 முதல் 4 கோடி
கீர்த்தி சுரேஷ்- ரூ. 3
காஜல் அகர்வால்- ரூ. 2 கோடி
தமன்னா- ரூ. 1.5 கோடி
இந்த சம்பள பட்டியல் விவரம் எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியவில்லை. ஆனால் சமூக வலைதளங்களில் இந்த விவரம் வைரலாகி வருவது குறிப்பிடத்தக்கது.



## ஆள் அடையாளம் தெரியாத அளவிற்கு ஒல்லியாக மாறிய நடிகை கீர்த்தி சுரேஷ்

தென்னிந்திய திரையுலகில் தவிர்க்க முடியாத நடிகையாகி இருக்கிறார் கீர்த்தி சுரேஷ். இவர் நடிப்பில் தற்போது அண்ணாத்த, சாணி காயிதம், மரைக்காயர், **sarakku vari pata** உள்ளிட்ட திரைப்படங்கள் உருவாகி வருகிறது. மலையாள திரையுலகின் தயாரிப்பாளர் சுரேஷ் மற்றும் நடிகை மேனகாவின் மகள், நடிகை கீர்த்தி சுரேஷ் என்பதை அறிவோம்.

நடிகை கீர்த்தி சுரேஷ், அவ்வப்போது யோகா செய்யும் வீடியோ, அல்லது புகைப்படங்களை தனது சலுகை வலைதள பக்கத்தில் வெளியிடுவார். அந்த வகையில் தற்போது யோகா செய்யும் புகைப்படத்தை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படத்தில் பார்ப்பதற்கு, உடல் எடை குறைந்த மிகவும் ஒல்லியாக தெரிகிறார் நடிகை கீர்த்தி சுரேஷ். மேலும் கீர்த்தியின் இந்த புகைப்படத்தை பார்த்த பலரும், ஆள் அடையாளமே தெரியவில்லையே என கூறி வருகின்றனர்.



## ரோஜா, பாரதி கண்ணம்மா கடந்த வாரம் TRP ரேட்டிங்கில் முதலில் எந்த சீரியல் தெரியுமா?

வாரா வாரம் **BARC India** நிறுவனம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் சீரியல்கள், படங்களை வைத்து முதல் இடம் பிடிக்கும் தொலைக்காட்சிகள், நிகழ்ச்சி குறித்து விவரம் வெளியிட்டு வருகிறார்கள்.

கடந்த வாரத்திற்கான விவரமும் தற்போது வெளியாகியுள்ளது. அதில் வழக்கம் போல சீரியல்களில் சன் டிவியின் ரோஜா முதல் இடம் பிடிக்க அடுத்த இடத்தில் விஜய்யின் பாரதி கண்ணம்மா சீரியல் இடம்பெற்றுள்ளது. டொப் 5ல் இடம்பெற்றிருக்கும் இன்னொரு சீரியல் என்றால் சன் டிவியின் வானத்தை போல தான். படங்களில் சன் தொலைக்காட்சி ஒளிபரப்பிய விஜய்யின் ஜில்லா முதல் இடத்தை பிடிக்க ராகவா லாரன்ஸ் நடித்த காஞ்சனா 2 அடுத்த இடத்தில் உள்ளது.



## காதலை மறுத்தால் தற்கொலை செய்து கொள்வேன்.. 16 வயது நடிகை அனிகாவிற்கு ரசிகர் மிரட்டல்

என்னை அறிந்தால் படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் நடிகை அனிகா. இதன்பின் மீண்டும் அஜித்தின் விஸ்வாசம் படத்தில் நடித்து மக்கள் மத்தியில் பிரபலமனார். இவர் தனது சமூக வலைதள பக்கத்தில் தொடர்ந்து ரசிகர்களை கவரும் வகையில் புகைப்படங்களை பதிவு செய்து வருகிறர்.

அதே போல் ரசிகர்களுடன் இன்ஸ்ட்டாகிறாமில் உறையாடியும் வருகிறார். அந்த வகையில் சமீபத்தில் ரசிகர்களுடன் இன்ஸ்ட்டாகிறாமில் உரையாடி வந்த அனிகாவிடம் ரசிகர் ஒருவர் " என் காதலை எற்று கொள்ளுங்கள். இல்லை என்றால் நான் தற்கொலை செய்து கொள்வேன் " என்று அனிகாவை மிரள வைத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த அனிகா " இதை போல் எற்கனவே எனக்கு நடந்துள்ளது. அதனை மீண்டும் நினைவு படுத்த வேண்டாம் " என்று கூறியுள்ளார்.



**தொகுப்பு :– ஹாசினி**




# ABC ஜூஸ் அப்பிள், பீட்ரூட், கரட் ஜூஸ்

ABC டிரிங்க் கேள்விப்பட்டிருக்கீங்களா?

Apple, Beetroot, Carrot இந்த மூன்றும் சேர்ந்த கலவைதான் ஏ.பி.சி ஜூஸ். எண்ணற்ற ஊட்டச்சத்துக்கள் கொண்ட ஜூஸ் என்பதால் 'மிராக்கிள் டிரிங்க்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு. நுரையீரல் புற்றுநோய் மற்றும் பிற நோய்களுக்கான மூலிகை மருந்தாக சீன மருத்துவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏ.பி.சி ஜூஸ், உடல் மற்றும் மூளை ஆரோக்கியத்துக்குப் பயன்படும் அற்புத குணங்களைப் பெற்றிருப்பதால் இப்போது உலகம் முழுவதும் பிரபலமாகிவிட்டது. அப்படி என்ன இதில் ஸ்பெஷல் என்ற நம் சந்தேகத்துக்கு ஏபிசி ஜூஸின் பலன்களைப் பட்டியலிடுகிறார் உணவியல் நிபுணர் லஷ்மி.

சத்துக்களின் கலவை

உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் எண்ணற்ற வைட்டமின்கள் மற்றும் மினரல்களின் கலவைதான் இந்த பானம். அப்பிள், பீட்ரூட், கரட் ஜூஸ் வகைகளை தனித்தனியாக பருகுவதால் கிடைக்கும் ஒட்டு மொத்த பலன்களும் இந்த ஒரே பானத்தில் கிடைத்துவிடுகிறது. A,B1, B2, B6, C, E மற்றும் K வைட்டமின்களும், ஃபோலேட், சிங்க், காப்பர், இரும்பு, கால்சியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், நியாசின், சோடியம் மற்றும் மங்கனீஸ் போன்ற தாதுப்பொருட்கள் அனைத்தும் ஒருங்கே அடங்கியுள்ளது.

முதுமைத் தோற்றத்தை தவிர்க்கிறது

ABC டிரிங்கில் உள்ள A,B-Complex, C, E மற்றும் K விட்டமின் சத்துக்கள் மினுமினுப்பாக தோற்றத்தைத் தருவதால் உண்மையான வயதைவிட மிகவும் இளமையாகத் தெரிவீர்கள். இதிலுள்ள தாதுப்பொருட்கள் மற்றும் நார்ச்சத்துக்கள் உடல் உறுப்புகளுக்கு புத்துயிர் அளித்து, அதன் இயக்கங்களை மேம்படுத்துகிறது.

சிவப்பழகைத் தரும்

முகப்பரு, கரும்புள்ளிகளுக்காக எவ்வளவோ க்ரீம்களையும், லோஷன்களையும் தடவி சலித்து போயிருப்பீர்கள். இவற்றுக்குக் காரணமான, உடலில் உள்ள தேவையற்ற ரசாயனக் கழிவுகளையும், நச்சுப்பொருட்களையும் வெளியேற்றி விடுகிறது. இந்த அற்புத பானத்தை நாள் தவறாமல் குடித்து வந்தால் முகம் பளிச்சென்று சிவப்பாக மாறிவிடும். எந்த கிரீமும், லோஷனும் தடவ வேண்டிய அவசியமே இருக்காது.



கண்ணாடி இனி தேவை இல்லை

கம்ப்யூட்டர் முன்பு மணிக்கணக்கில் வேலை செய்வதால் கண்களில் நீர்வறண்டு, கண்ணைச் சுற்றியுள்ள தசைகள் பலவீனமடைந்து விடும். அந்த கண் பார்வையை மேம்படுத்தும் ஏ வைட்டமின் அதிகம் இருப்பதால் கண் தசைகளை பலப்படுத்தும். கண்பார்வையை கூர்மையடையச் செய்யும்.

நினைவாற்றலைத் தூண்டுகிறது

பள்ளி செல்லும் உங்கள் பிள்ளைகள் அதிக மதிப்பெண் பெற, விலையுயர்ந்த பானங்களை வாங்கிக் கொடுக்கத் தேவையில்லை. நினைவாற்றல் மற்றும் கவனிக்கும் திறனை வளர்க்கும் ABC பானத்தை தினமும் ஒரு கிளாஸ் கொடுத்துப் பாருங்கள். விளையாட்டு, படிப்பு என எல்லவாற்றிலும் சுறுப்பாவதுடன் நம்பர் ஒன்னாகவும் ஜொலிப்பார்கள்.

உள்ளுறுப்புகளின் வலிமைக்கு...

கல்லீரல், இதயம், சிறுநீரகம் இந்த மூன்று உறுப்புகள்தான் உடலில் உள்ள கழிவுகளை அகற்றும் பணியைச் செய்கின்றன. இந்த மூன்றைத் தவிர மற்ற உள்ளுறுப்புகளும் அதனதன் பணியைச் செய்ய அவற்றை பாதுகாப்பது அவசியம். ABC பானத்தில் கிடைக்கும் முக்கிய மூலப்பொருட்களான ஆல்ஃபா, பீட்டா கரேட்டின் மூலப்பொருட்கள் ரத்த அழுத்தம், ரத்தக் கொழுப்பை கட்டுப்படுத்தி, செரிமானத்தை எளிதாக்குகிறது. மேலும், இதயநோய், கல்லீரல் நோய் மற்றும் சிறுநீரக நோய் வராமல் தடுக்கவும் உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி

காய்ச்சல், ஆஸ்துமா, ரத்தசோகை போன்ற நோய்கள் வராமல் இருக்க உடலில் நோய் எதிர்ப்புசக்தி வலுவாக இருக்க வேண்டும். ஹிமோகுளோபின் மற்றும் ரத்த வெள்ளையணுக்கள் எண்ணிக்கை ரத்தத்தில் அதிக அளவில் இருந்தால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். ABC ஜூஸ் நோய் எதிர்ப்பு சக்தி உத்தரவாதம் தந்து நோய்களை அண்டவிடாமல் காக்கிறது.

புற்றுநோய் அழற்சி குறையும்

பீட்ரூட்டில் பீட்டாசியின் என்னும் மூலப்பொருள் புற்றுநோய் செல்களின் வளர்ச்சிக்கு எதிராக செயல்படுவதாக ஆய்வில் கண்டறிந்துள்ளனர். மேலும் பீட்ரூட்டில் உள்ள இரும்புசத்து சிவப்பணுக்கள் மீளுருவாக்கத்துக்கு உதவி புற்றுநோய் செல்களுக்கு ஆக்ஸிஜனை எடுத்துச் செல்கிறது. இதன்மூலமும் புற்றுநோய் செல்கள் அழிக்கப்படுகின்றன.

எடையைக் குறைக்க...

கலோரிகள் குறைந்த ABC ட்ரிங் நிச்சயமாக உடல் பருமனை குறைக்க உதவும். உடற்பயிற்சி செய்து முடித்தபிறகு இந்த பானத்தை எடுத்துக் கொண்டால் புத்துணர்ச்சியும் கொடுக்கும். இப்ப சொல்லுங்க இது மிராக்கிள் டிரிங்க்தானே !

எப்படி தயாரிப்பது?

அப்பிள், பீட்ரூட், கரட் மூன்றையும் சிறுசிறு துண்டுகளாக்கி மிக்ஸியில் போட்டு விழுதாக அரைக்க வேண்டும். அதை ஒரு டம்ளரில் போட்டு, அதனுடன் எலுமிச்சைச் சாறு, தேன் கலக்கினால் மிராக்கிள் டிரிங்க் ரெடி. காலையில் வெறும் வயிற்றில் குடிப்பது நல்லது. தினமும் ஒரு டம்ளர் தவறாமல் குடித்து வந்தால் அற்புதமான பலன்கள் கண்கூடாகவே தெரிய வரும்.

தொகுப்பு :– ஹாசினி

# ஓர் அகதியின் பயணம்

கடந்தவார தொடர்ச்சி...

எங்கள அவரோட அனுப்பிட்டு பின்னால வந்த தன்னோட வாகனத்தில ஏறி போனதும் நாங்கள் வந்த வாகனம் காட்டுப்பாதைகள் ஊடாக வேகமாய் சீறிப் பாயத்துவங்கியதும் எங்கள் மனதும் அதே வேகத்தில் படபடக்க துவங்கியது ஒரு பக்கம் ஐரோப்பியக் கனவு நிறைவேறப்போகும் பெரும் மகிழ்வும் போகிற வழியில பிடிபட்டுவிடக்கூடாது என்கிற பயமும் கலந்த ஒரு உணர்வுக்குள்ளாய் அகப்பட்டிருந்தோம் ...

சரியாக 1 மணிநேரம் இருக்கும் எங்கள் வாகனம் ஒரு பொலிஸ் காவலரணில் மறிக்கப்பட்டதும் அங்கிருந்த அதிகாரி வாகனத்தினுள் எட்டிப்பார்த்தார் எங்களது இதயங்கள் வேகமாக அடிக்க துவங்கிய இதயத்துடிப்பு செதஸ்கோப் இல்லாமலே வெளியில் கேட்கும் அளவிற்கு இருந்தது இருப்பினும் எங்கள் முகங்களில் பயத்தைக் காட்டாமலே இருந்தோம்... என்ன நினைத்தாரோ தெரியவில்லை கையால் போங்கள் என்று செய்கை காட்டவும் எங்கள் வாகனம் மீண்டும் வேகமெடுக்கப் பெருமூச்சு விட்டு மனதை ஆறுதல் படுத்தி

15 நிமிடங்கள் கூட கடந்திருக்காது மீண்டும் மறிக்கப்பட்டோம்ஆனால்முதல்காவலரணில் நடந்தது போல நடந்துவிடும் எனும் எண்ண ஓட்டத்தில் இருந்ததால் பெரிதாக பயம் எங்களை ஆட்கொண்டிருக்காததால் சூழ்நிலை எங்கள் கரங்களை மீறி போவதை நாங்கள் உணர முதலே அதிகாரிகள் எங்கள் தொலைபேசிகள் மற்றும் கடவுச்சீட்டுகளை (Passports) வாங்கிக்கொண்டு யாருடனோ வாகேகியில் தொடர்பை ஏற்படுத்து ரஷ்ய மொழியில் பேசினார்கள் அங்கு என்ன நடந்து கொண்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ள முடியாமல் அமர்ந்திருந்தோம் ...



சிறிது நேரத்தில் அங்கு இன்னும் ஒரு அதிகாரி வந்து இறங்கினார் அவர் எங்களை ஏற்றிவந்த நபருடன் அவர்கள் மொழியில் ஏதோ கதைத்து விட்டு தனது வாகனத்தில் செல்ல எங்களை ஏற்றிவந்த நபர் அந்த வாகனத்தை பின்தொடர்ந்து அருகில் இருந்த ஒரு பொலிஸ் நிலையத்திற்குள் வானம் சென்றதும் நாங்கள் இறக்கப்பட்டு விசார-ணை அறை ஒன்றினுள் அமர்த்தப்பட்ட போதுதான் உணர்ந்தோம் நிலமை எங்கள் கையை விட்டு சென்றுவிட்டதை...

அதன் பிறகு நான்கு ஐந்து அதிகாரிகள் எங்களிடம் விசாரணைகளை மேற்கொண்டார்கள் நாங்கள் பின்லாந்து செல்லும் நோக்கத்தோடுதான் வந்துள்ளோம் என்பது அவர்களுக்கு உறுதியாகி இருந்தாலும் எங்களிடம் அதை உறுதிப்படுத்தும் நோக்கோடு பல கேள்விகள் கேட்கப்பட்டன நாங்கள் எதற்கும் பிடிகொடுப்பதாய் இல்லாத பொழுது வெருட்டப்பட்டோம் அதற்கும் நாங்கள் பிடி குடிப்பதாய் இல்லை என்பதை உணர்ந்த அதிகாரிகள் எங்களையும் எங்கள் உடைமைகளையும் பரிசோதித்து விட்டு வேறு ஒரு இடத்திற்கு வாகனத்தில் அனுப்பினார்கள். அங்கு எமக்காய் ஒரு தமிழ் பேசக்கூடிய மொழிபெயர்ப்பாளர் காத்திருந்தார் அவரும் இலங்கையர்தான் ஆனால் ரஷ்யக் குடியுரிமை பெற்று அங்கு மொழிபெயர்ப்பாளராய் பணிபுரிகிறார் . அவரோடு பேச அனுமதிக்கப்பட்டோம் அவரும் எமது நாட்டை சேர்ந்தவர் என்பதாலும் எனது மொழியைப் பேசியதாலும் அவர் கேட்டுக்கொண்டதுக்கு இணங்க நடந்தவற்றைக் கூறினோம் அவர் அனைத்தையும் கேட்டுவிட்டு அதிகாரிகளிடம் எம்மை உண்மையை ஒத்துக்கொள்ளுமாறு கூறினார் இல்லாவிட்டால் வழக்கு விசாரணை என்று இழுத்தடித்து விடுவார்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் 14 தொடக்கம் 21 நாட்களுக்குள் நாடு திரும்பலாம் எனவும் கூற வேறு வழியற்று நாமும் குற்றத்தை ஒப்புக்கொள்ளவே எங்கள் கைவிரல் அடையாளங்கள் புகைப்படங்கள் என்பன எடுக்கப்பட்டது ...

இவை நடந்து முடிவதற்குள் நேரம் 5 மணியைத் தாண்டி விட்டதால் எங்களை இன்று நீதி மன்றத்தில் முன்னிறுத்த முடியாமல் போகவே அருகிலிருந்த ஒரு காவல் நிலையத்தில் ஜீழடைஉந எவயவலைஸெ சிறை வைத்தார்கள் அது எங்களது முதல் சிறை அனுபவம் என்பதால் மனம் கூனிக்குறுகியே போய் விட்டது உணவிலும் நாட்டம் இன்றி அன்றைய இரவை அந்த நான்கு சுவர்களுக்குள்ளாய் எதிர்காலத்தைக் குறித்த பயத்துடனே அந்த இரவும் கழிந்தது...

சிறையில் அடைக்கப்பட்டிருந்த எம்மை நீதிமன்றத்திற்குஅழைத்துசெல்லஅதிகாரிகள் வந்த போதுதான் விடிந்ததையே அறிந்து கொள்ளக்கூடியதாய் இருந்தது அன்றைய பொழுதின் எமது நிலை. அழைத்துச்சென்று அங்கு நீதவான் முன்னிலைப்படுத்தி விசாரணையின் முடிவில் நாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் 14 நாட்கள் வெளிநாட்டவர்களைத் தங்கவைக்கும் முகாம் போன்றன ஒரு சிறையில் வைத்து எம்மை அதன் பிறகு நாட்டிற்கு அனுப்பும் படியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது....

பு.தர்சிகன்

# இலங்கையில் ஊடக சுதந்திரம்

கடந்தவார தொடர்ச்சி...

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் கார்ப்பரேட் கவர்னன்ஸ் நிறுவனம் இது தொடர்பாக ஒரு ஆய்வை வெளியிட்டது. அதன் முடிவுகள் அதிர்ச்சி தரும் தகவல்களை வெளியிட்டன. காப்ரேட் மூத்த நிர்வாகிகள் இயக்குநர்கள் என்போர் சமூக ஊடகங்களை வாய்புகள் மற்றும் அபாயங்கள் என்பவற்றை எவ்வாறு கையாள் கின்றார்கள்என்பதை அது விளக்குகிறது.

பதிலளித்தவர்களில் தொண்ணூறு சதவீதம் பேர் சமூக ஊடகங்களில் கூறப்படுவது தங்கள் நிறுவனத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படை புரிதலைப் பகிர்கிறது் ஆனால் அவர்களின் நிறுவனங்களில் 32 சதவிகிதத்தினர் மட்டுமே சமூக ஊடகங்களை அபாயங்களை அடையாளம் காண கண்காணிக்கின்றனர். மேலும் 14 சதவீதம் பேர் மட்டுமே பெரு நிறுவன செயல்திறனை அளவிட சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர்.

2012 இல் கணக்கெடுக்கப்பட்ட நிறுவனங்களில் 59 சதவீதம் மட்டுமே வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றன. 49 சதவீதம் பேர் மட்டுமே அவற்றை விளம்பரப்படுத்த பயன்படுத்துகின்றனர். 35 சதவீதம் பேர் மட்டுமே வாடிக்கையாளர் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்துகின்றனர். 30 சதவிகிதத்தினர் மட்டுமே போட்டியாளர்கள். புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஆராய்ச்சி செய்ய அல்லது ஊழியர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். அதே நேரத்தில், பதிலளித்தவர்களில் 65 சதவீதம் பேர் சமூக ஊடகங்களை தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும், 63 சதவீதம் பேர் வணிக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்துகின்றனர் . இந்த ஆனால், உண்மையில், மேற்கூறிய புள்ளிவிவரங்களை அவை மி-கவும் ஆபத்தானதாக ஆக்குகின்றன, ஏனெனில் சமூக ஊடகங்களுடனான பரிச்சயம் இங்கு நிர்ணயகரமானதாக இருக்கின்றது. சமூக ஊடகங்கள் இல்லாமல் உங்கள் வாழ்க்கையை உங்களால் கற்பனை செய்ய முடியாவிட்டால், சமூக வலைப்பின்னலின் தீய சக்தி மற்றும் தாக்கத்திற்கு நீங்கள் பலியாகிவிட்டீர்கள் என்பதற்கான அறிகுறியாகும். சமூக ஊடகங்களின் எதிர்மறையான விளைவுகளை நீங்கள் ஒன்று அனுபவித்திருக்கிறீர்கள் என்பதும் இதன் பொருள். சமூக ஊடகங்களும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றாலும் . நடைமுறை ஏகபோக முதலாளித்துவத்தில் சமூக ஆர்வலர்களும் சமூக தேவைகளும் மண்டியிட்டு விடுகின்றன.

இன்னுமொரு தெளிவான நிலை இந்த அரச மற்றும் பெருமுதலாளிகளின் ஊடகங்களில் காணப்படுகின்றன. தேர்தல் காலத்தில் ஒரு நிர்ணயகரமான சக்தியாக அது காணப்படுகின்றது. மக்கள் எதை விரும்புகின்றார்கள். எவ்வாறான மாற்றத்தை விரும்புகின்றார்கள்என்ற நிலையை மாற்றி விடுகிறது. மதம் இனம் பிரதேசம் என காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றை எழுச்சியுற செய்வதிலும்ஒருஉணர்சிகரமானநிலையை தக்கவைத்துக்கொள்ள இந்த ஊடங்கள் ஒரு பெரும் சக்தியாக காணப்படுகின்றது. அரசியல் ஊழல்களை மூடி மறைப்பதில் சமூகம் மீதான அடக்குமுறைகளை மூடிமறைப்பதில் ஊடங்கள் இன்று பெரும் பங்காற்றுகின்றன.எனவே உண்மை ஜனநாயகம் என்பது எப்போதோ மரணித்துவிட்டது இந்நிலை நீடிக்கு வரை ஜனநாயகம் மீன் உயிர்ப்பு பெறாது அதற்கான சாத்தியம் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லவே இல்லை.

# வாழ்க்கை தத்துவம் கவிதை வரிகள்

**நமக்கு வாழ்கை பல அனுபவங்களையும் பாடங்களையும் கற்றுத் தருகின்றது அதில் முக்கியமான ஒன்று தான் நாம் யார் யாரிடம் எவ்வாறு பழக வேண்டும் எந்த அளவோடு பழக வேண்டும் என்பது.**

**உங்கள் மீது அதீத நம்பிக்கை வைத்திருப்பவர்களை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் என்று நினைக்காதீர்கள் அது தான் துரோகத்தின் உச்சம்.**

**உங்களுக்கு தெரிந்த விடயங்களை மட்டும் மற்றவர்களுடன் பேசி பழகுங்கள் இது காலப்போக்கில் உங்கள் மீதான நம்பிக்கை மற்றும் மரியாதையை அதிகப்படுத்தும்.**

**சந்தோஷமான நேரத்திலும் துன்பமான நேரத்திலும் நாம் நினைவில் வைத்திற்குக்க வேண்டிய ஒரு உண்மை இந்த நிமிடம் கூட நிரந்தரம் இல்லை.**

**நினைவில் வைத்துக் கொள் உன் வாழ்க்கையில் உறக்கம் இரக்கம் இரண்டும் அளவோடு தான் இருக்க வேண்டும். உறக்கம் அளவுக்கு மீறினால் சோம்பேறி என்பார்கள். இரக்கம் அளவுக்கு மீறினால் ஏமாளி என்பார்கள்.**

**கடன்களும் நினைவுகளும் தேவைக்கு ஏற்ப அளவோடு இருக்க வேண்டும். கடன்களும் நினைவுகளும் அளவுக்கு மீறினால் இரண்டுமே தூக்கத்தை பறித்து விடும்.**

**வாழ்வில் வரும் வலிகளை சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொள்ளுங்கள். அப்படியே சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொண்டால் உன்னை விட வலிமையானவர்கள் யாரும் இல்லை இந்த உலகில்.**

**ஒரு தவறை செய்தால் ஒதுக் கொள்ள எந்த சூழ்நிலையிலும் தயங்காதீர்கள் அவற்றை சரி செய்து கொள்ள முடியும். ஆனால் செய்த தவறை இல்லை என்று சாதிக்காதீர்கள் பிறகு அவற்றை வாழ்நாளில் சரி செய்ய முடியாது.**

**மற்றவர்களிடம் குற்றம் என அடையாளம் காணும் விடயம் நம்மக்கு ஏற்பட்டால் அதை சோதனை என்று அழைக்கிறோம்.**

**உன் பாதையை நீயே உருவாக்கிக் கொள்ளும் தண்ணீராக இரு. வாழ்வில் எதையும் சாதிக்கலாம். அடுத்தவர் பாதையை தடுக்கும் பாறையாக இருந்து விடாதே.**

**மனதில் நஞ்சு வைத்து உதட்டில் தேனாக கொஞ்சி பேசும் மனிதர்களும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதே.**

**காகமும் குயிலும் பார்ப்பதற்கு இரண்டும் ஒன்று போல தான் தோற்றமளிக்கும். ஒருவரின் வெளித் தோற்றத்தை வைத்து ஒருவரை மதிப்பிடாதீர்கள்.**

# கொழும்பு போர்ட் சிட்டி விவகாரம் – சீன காலணியாக மாறப்போகின்றதா?

கடந்தவார தொடர்ச்சி...

அவ்வாறான சூழ்நிலை தான் உருவாக்கப்படும். சீனர்கள் இந்தெந்த நாடுகளுக்கு செல்கின்றார்களோ கிட்டத்தட்ட 75 நாடுகளுக்கு அவர்கள் அந்த கொரோனா இன்ஜக்சன்சை வழங்குவதாக ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். 40 நாடுகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டும் இருக்கின்றது. ஏனைய நாடுகள் இவர்களுடைய இன்ஜக்சனை வாங்குவதற்கு தயங்குகின்றார்கள். இதிலும் இவர்கள் என்ன கெமிக்கல்களை வழங்குகின்றார்கள் என்று தெரியவில்லை நாளடைவில் தான் தெரியும்.

ஆகவே இந்த கெமிக்கல்களையும் நாட்டுக்குள் திணித்து இங்கிருக்கின்ற மக்களையும் ஒரு பலவீனப்படுத்தி அவர்களை ஒரு மண்பான்டமாக கொண்டுவருகின்ற சீன புரடக்டுக்கள் எல்லாவற்றையும் நாங்கள் புறக்கணிக்கின்ற ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். குறித்த போர்ட்சிட்டியில் இடம்பெறுகின்ற வியாபாரத்திலே தமிழர்களோ சிங்களவர்களோ முஸ்லிம்களோ கலந்துகொள்ளக்கூடாது. அவ்வாறு இருந்தால் எமது பணம் இன்னும் விரயமாக்கப்படும். அங்கு சரியான தொரு வகையிலே வியாபாரத்தை நடத்த முடியாத சூழல் உருவாக்கப்படும்.

ஆகவே எங்களுடைய நாட்டில் அனைத்து வளங்களும் இருந்தும் அதனூடாக ஒரு மூலதனத்தை உருவாக்குகின்ற நிலவரத்தை நாங்கள் தவறவிட்டுக்கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டிலே பொருளியலாளர்கள் இருக்கின்றார்கள். மருத்துவர்கள் இருக்கின்றார்கள் இவர்களை ஊக்குவித்து இந்த அரசாங்கம் படிப்பித்து பணத்தை கொடுத்து இவர்களை இந்த நாட்டிலே அமர்த்தினால் நாடு பெரும் செல்வம் கொண்ட நாடாக உருவாகும். நாங்கள் ஒரு கண்டுபிடிப்பு துறையிலே எதையும் கண்டுபிடிக்கவில்லை. எதையும் நாங்கள் கண்டுபிடித்து செயற்படுத்தி சந்தைப்படுத்தவில்லை என்றவொரு நடவடிக்கை இருக்கிறது. உண்மையிலே தன்னிறைவு பொருளாதாரத்தை இந்த நாட்டினுடைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் விரும்புகின்றார்கள் என்றால் சீன அரசை அல்லது சீனாவினுடைய இந்த ஆக்கிரமிப்பை இங்கிருந்து வெளியேற்றுகின்ற நடவடிக்கை அனைத்தையும் சீன அரசாங்கத்திற்கு எதிராக நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஒரு விடயத்தை உற்று நோக்கும் போது 2000 ஆம் ஆண்டு தொடக்கம். ஆபிரிக்கா . தென் அமெரிக்கா மற்றும் தென்னாசியா நாடுகளுக்கு கடன் வழங்குவதன் மூலம் தனது ஆதிக்கத்தை சீனா சர்வதேச ரீதியாக அதிகரித்தது வருக்கின்றது

குறிப்பாக அரசியல் நெருக்கடிகள் . ஊழல் குற்றசாட்டுகள் போன்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வளர்முக நாடுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்க்காக கடன்களை வழங்குகின்றோம் என்கிற போர்வையில் சீனா அத்துமீறி பல்வேறு நாடுகளில் நுழைந்து அதிகாரம் செலுத்தி வருகின்றது.

இவ்வாறு அதிகாரம் செலுத்துவதன் மூலம் மேற்குறித்த நாடுகளின் பிரதான வணிக நிறுவனங்களை அபகரித்தல் . இயற்கை வளங்களை ஆக்கிரமித்தல் . தனது பொருட்களுக்கான சந்தைகளாக மேற்குறித்த நாடுகளை பயன்படுத்தல். குத்தகை அடிப்படையில் நாடுகளின் காணிகளை அபகரித்தல் போன்ற ஆக்கிரமிப்புகளில் சீனா ஈடுபட்டு வருகின்றது .

அந்த வகையில். 2016-2017 காலப்பகுதியில் மட்டும் ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான கென்யாவிற்கு 9.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா கடனாக வழங்கி இருந்தது . ரயில் பாதை மற்றும் வீதி அபிவிருத்தி திட்டங்களுக்கு மேற்குறித்த நிதி செலவிடப்பட்டது .

இந்த கடன்களின் பின்னணியில் தற்போது கென்யாவின் இலாபகரமான துறைமுகங்களின் ஒன்றான Port of Mombasa ஐ அபகரிக்க சீனா நிர்பந்தித்து வருகின்றது. குறிப்பாக சீனாவிடம் இருந்து **Standard Gauge Railway** திட்டங்களுக்காக பெற்று கொண்ட கடன்களை கென்யா மீள செலுத்த தவறினால் **Port of Mombasa** துறைமுகத்தை சீனாவிடம் கென்யா இழக்கும் அபாயம் ஏற்பட்டு இருக்கின்றது அதே போல சாம்பியா நாட்டின் மொத்த கடனில் மூன்றில் ஒரு பங்கு சீனாவிடம் இருந்து பெறப்பட்டு இருக்கின்றது. இதன் மூலம் இந்த நாட்டின் இறையாண்மையை மீறி சாம்பியா அரசுக்கு சொந்தமான **Zesco** மின் உற்பத்தி நிறுவனத்தை கையகப்படுத்த சீனா முயற்சி செய்து வருகின்றது

**Djibouti** எனும் மற்றுமொரு ஆபிரிக்கா நாடு 77% ஆன தனது கடன்களை சீனாவிடம் இருந்து பெற்று இருக்கின்றது . இதன் மூலம் நாட்டிற்குள் நுழைந்த சீனா தற்போது தனது முதலாவது சர்வதேச இராணுவ தளத்தை இந்த நாட்டில் நிறுவி இருக்கின்றது

தென் அமெரிக்கா நாடுகளில் ஒன்றான ஈக்வடார் தனது கச்சா எண்ணெய் உற்பத்தியில் 80 முதல் 90 சதவிகிதத்தை தான் சீனாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பதிலாக சீனாவிற்கு வழங்க நிர்பந்தின் பேரில் ஒப்பு கொண்டு இருக்கின்றது

தஜிகிஸ்தான் நாட்டில் அமைக்கப்பட்ட மின்நிலையத்திற்காக சீனா அரசாங்கத்திடம் இருந்து பெற்று கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்கள் நிலுவையில் உள்ள கடனை தள்ளுபடி செய்வதற்கு சுமார் 1.000 சதுர கிலோ மீற்றர் (390 சதுர மைல்) நிலபரப்பை தஜிகிஸ்தான் நாட்டில் குத்தகை அடிப்படையில் சீனா அபகரித்து இருக்கின்றது

**Montenegro** நாட்டில் அமைக்கப்பட்ட A-1 motorway வீதி அபிவிருத்தி திட்டத்திற்காக சீனா அரசாங்கம் வழங்கிய 1 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன்களை திருப்பிச் செலுத்த தங்களுக்கு உதவுமாறு ஐரோப்பியா ஒன்றியத்திடம் அந்த நாட்டு அரசாங்கம் கோரிக்கை முன் வைத்து இருக்கிறது. கடன்களை மீள செலுத்த தவறும் பட்சத்தில் சீனா நாட்டிடம் தங்களின் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்களை இழக்க வேண்டிய



அபாயத்தில் இருப்பதாக **Montenegro** அரசாங்கம் சில வாரங்களுக்கு முன்னர் சொல்லி இருக்கின்றது

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீத் அவர்கள் . தனது நாடு சீனாவிடம் இருந்து 3.5 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை பெற்று இருப்பதாக சொல்லி இருப்பதுடன் மேற்குறித்த கடன்கள் தனது நாட்டின் இறையாண்மையை கேள்விக்கு உட்படுத்தி இருப்பதாகவும் தங்களது நாட்டின் சுதந்திரம் . மனித உரிமைகள் உட்பட்ட பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்து இருப்பதாகவும் ஏற்று கொண்டு இருக்கின்றார்

அதே போல இலங்கையின் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கான நிதியில் 85 % வீத கடன்களை சீனா வழங்கியதன் மூலம் மேற்படி துறைமுகத்தை சீனா அரசுக்கு சொந்தமான Port Holdings Company Limited நிறுவனம் மூலம் 99 வருட குத்தகைக்கு பெற்று கொண்டு இருக்கிறார்கள் .

இது தவிர தற்போது பாராளமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட $1.4 பில்லியன் பெறுமதியான **Colombo Port City** கட்டுமானத்தின் போது **China Communications Construction Company (CCCC)** என்கிற சீனா அரசுக்கு சொந்தமான மோசடி நிறுவனத்தை ராஜபக்சே குடும்பத்தின் ஒத்துழைப்புடன்பிரதானமுதலீட்டாளராக உள் நுழைத்து இருந்தார்கள்

பங்களாதேஷ் . பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளில் மோசடிகளில் ஈடுபட்ட மேற்படி நிறுவனமும் தன் துணை நிறுவனங்களும் தற்போது அமெரிக்கா உட்பட்ட பல நாடுகளில் தடை செய்யப்பட்டு இருக்கின்றது

இது தவிர நிறைவேற்றப்பட்ட துறைமுக சட்டமூலத்தின் மூலம் Inland Revenue, VAT, Excise, Customs, Betting & Gaming Levy, Exchange Control, Casino Business Regulation போன்ற சகல நெறிமுறைகளில் இருந்தும் விலக்கு பெற கூடிய நிலப்பரப்பை தங்களுக்கு உரியதாக இலங்கை தீவில் உருவாக்கி கொண்டு இருக்கின்றார்கள்

அதே போல இலங்கை மாகாண சபைகளுக்கும் மாநகர சபைகளுக்கும் கட்டுப்பட அவசியமற்ற நிர்வாகத்தை இலங்கை தீவில் உருவாக்கி இருக்கின்றார்கள்

குறித்த இலங்கையின் துறைமுக நகரத்திற்குள் தாங்களது விருப்பு வெறுப்புக்குரிய முதலீட்டர்களை மட்டுமே அங்கீகரிக்கும் முறை ஒன்றையும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள் அதே போல இலங்கையர்கள் யாரும் இலங்கை பணமான ருபா மூலம் துறைமுக நகரத்தில் முதலீடு செய்ய முடியாது என்கிற சூழலையும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்

இது தவிர . குறித்த பகுதியில் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் இலங்கையர்கள்நகரை விட்டு வெளியேறும் போது கட்டணம் செலுத்த வேண்டிய நிர்பந்தமும் ஏற்படுத்த பட்டு இருக்கின்றது

இதுமட்டுமில்லாது நுரைசோலை. யாழ்ப்பாண தீவுகள் என பரந்துபட்டு தங்களது வணிக விரிவாக்கங்களில் ஈடுபட சீனா முயற்சித்து வருகின்றது மறுபுறம் வீதி அபிவிருத்தி திட்டங்கள் . நீர்ப்பாசன திட்டங்கள் என எண்ணற்ற உட்கட்டமைப்பு வசதிகளுக்காக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக சீனாவிடம் இருந்து கடன்களை பெற்று வருகின்றது .

சீனாவிடம் இருந்து பெற்று கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்தும் ஆற்றலையும் இலங்கை இழந்து விட்ட நிலையில் இலங்கை அரசாங்கமும் இலங்கையர்களும் இனி ஒருபோதும் சீனா ஆதிக்கத்தில் இருந்து விடுபட முடியாது அந்த வகையில் சீனாவிடம் இருந்து பெற்று கொண்ட கடன்களினால் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் **Djibouti, Kyrgyzstan.** லாவோஸ். மாலைதீவு. மொங்கோலியா . **Montenegro.** பாகிஸ்தான் . மற்றும் **Tajikistan** போன்ற நாடுகளின் வரிசையில் இலங்கையும் மிக விரைவாகவே சேர்ந்து கொள்ளும். கடவுளாலும்கூட இந்த நாட்டை உருவாக்க முடியாத சூழல் உருவாக்கப்படும்.

**இரணியன்**

# கருப்பு பூஞ்சை அல்லது மியூகோர்மைகோசிஸ் என்றால் என்ன?

கருப்பு பூஞ்சை **(Black Fungus)** அல்லது மியூகோர்மைகோசிஸ் **(Mucormycosis)** எனப்படும் நோய் தற்போது இந்தியாவில் அதிகம் பரவி வருகிறது. அங்கு கொரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பரவல் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை சுமார் 8,800 பேருக்கு கருப்பு பூஞ்சை எனப்படும் மியூகோர்மைகோசிஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்த அரிய தொற்று பாதிப்பு ஏற்பட்டவர்களில் 50 சதவிகிதம் பேர் உயிரிழக்கின்றனர். உயிர் பிழைக்கும் சிலருக்கு ஒரு கண் அகற்றப்படுகிறது. மிகவும் அரிதாக உண்டாகும் இந்த மியூகோர்மைகோசிஸ் தொற்று பாதிப்பு கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்த பல்லாயிரம் பேருக்கு சமீப மாதங்களாக இந்தியாவில் உண்டாகி வருகிறது.

**COVID-19** தொற்றைக் குணப்படுத்த பயன்படுத்தப்படும் ஸ்டீராய்ட் (ஊக்க மருந்து) மருந்துகள் மற்றும் கருப்பு பூஞ்சை தாக்குதல்பாதிப்புஆகியவற்றுக்குஇடையே தொடர்பு இருப்பதாக மருத்துவர்கள் நம்புகின்றனர்.

### மியூகோர்மைகோசிஸ் (Mucormycosis) என்றால் என்ன?

மியூகோர்மைகோசிஸ் என்பது மிகவும் அரிதான தொற்று. மண், தாவரங்கள், உரம், அழுகும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் பொதுவாகக் காணப்படும் பூஞ்சையால் இது உருவாகிறது.

இது எல்லா இடங்களிலும் இருக்கிறது. மண்ணிலும் காற்றிலும் ஆரோக்கியமான மக்களின் மூக்கு மற்றும் சளியிலும் கூட இது காணப்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இது சைனஸ்கள், மூளை மற்றும் நுரையீரலைப் பாதிக்கிறது. நீரிழிவு, புற்றுநோய், **HIV** / எய்ட்ஸ் போன்ற கடுமையான நோயெதிர்ப்புக் குறைபாடுள்ளவர்களுக்கு உயிருக்குக் கூட ஆபத்தை இது விளைவிக்கக்கூடியது.

### இலங்கையில் மியூகோர்மைகோசிஸ் தொற்று

மியூகோர்மைகோசிஸ் தொற்று இலங்கைக்கு புதிதல்ல. 2019 ஆம் ஆண்டு 42 நோயாளர்களும் 2020 இல் 24 பேரும், 2021 இல் இதுவரையான காலப்பகுதிக்குள் 24 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் இவர்களில் எவருக்கும் **COVID** தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. எனினும், பூமத்திய கோட்டிற்கு நெருங்கிய நாடான இலங்கையில் கருப்பு பூஞ்சை நோய் பரவுவதற்கு தேவையான அனைத்து சுற்றுச்சூழல் காரணிகளும் உள்ளதாக பூஞ்சை நோய் நிபுணர், மருத்துவர் பிரிமாலி ஜயசேகர தெரிவித்தார். இவர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூஞ்சை திணைக்கள பிரிவின் தலைவராக உள்ளார்.

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த மட்டத்தில் உள்ள நோயாளர்களுக்கே இந்த நோய் அதிகம் பரவுவதாகவும் இந்நோயை குணப்படுத்த தேவையான அனைத்து வசதிகளும் இலங்கையில் உள்ளதாகவும் பூஞ்சை நோய் நிபுணர் பிரிமாலி ஜயசேகர குறிப்பிட்டார்.

### நோய் அறிகுறிகளும் தாக்கமும்

கருப்பு பூஞ்சை நோய் தாக்கினால் கண், மூக்கு, காது, தாடை பகுதிகளில் வலி, வீக்கம் காணப்படும். பல் வலி போல் தாடையில் வலி இருக்கும்.

ஒற்றைத் தலைவலி, மூக்கில் இரத்தம் வருவது கருப்பு பூஞ்சை நோய் தாக்கத்தின் அறிகுறிகளாகும்.

கருப்பு பூஞ்சை தாக்கிய பகுதியை பரிசோதனை செய்து பார்த்தால் அங்கு கருப்பு நிறத்தில் இந்த பூஞ்சைகள் காணப்படும். இதன்காரணமாக இந்நோய்க்கு கருப்பு பூஞ்சை என பெயரிடப்பட்டுள்ளது.


கட்டுப்படுத்தாத நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு கருப்பு பூஞ்சை நோய் எளிதில் தாக்கும்.

ஸ்டீராய்ட் மருந்துகளை அதிகளவு எடுத்துக்கொள்ளும் மூச்சு திணறல், நுரையீரல் பாதிப்பு, ஆர்த்ரைட்டிஸ் நோய் பாதிப்பு, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களை கருப்பு பூஞ்சை எளிதில் தாக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும் **'immuno suppression'** மாத்திரைகளை எடுத்துக் கொள்பவர்களுக்கு கருப்பு பூஞ்சை நோய் தாக்கும்.

கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்களுக்கு மூச்சுத் திணறல் அதிகரிக்கும். மூச்சுத் திணறலை குறைக்க ஸ்டீராய்ட் பயன்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக கொரோனா நோயாளிகளுக்கு கருப்புபூஞ்சை நோய் தாக்குதல் அதிகரித்து காணப்படுகிறது. கருப்பு பூஞ்சை நோய் படிப்படியாக கண் பார்வையை பாதிக்கும்.

கருப்பு பூஞ்சை அறிகுறி தென்பட்டவுடன் ஆரம்பத்திலேயே சிகிச்சை எடுத்தால் நோயில் இருந்து மீண்டு விடலாம்.



# பாலஸ்தீன் – இஸ்ரேல் போரில் வென்றது யார்? ஓர் அரசியல் ஆய்வு

சர்வதேச குத்ஸ் தினமான 07.05.2021 அன்று மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குள் யூத இராணுவம் புகுந்து அங்கிருந்தவர்களை தாக்கியது. அதனை தொடர்ந்து 09.05.2021 இல் ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது ரொக்கட் தாக்குதலை ஆரம்பித்தனர். 20.05.2021 வரை பதினொரு நாட்கள் நடைபெற்ற போரானது தற்செயலாக நடைபெற்றதல்ல. மாறாக இஸ்ரேலினால் நன்கு திட்டமிட்டே இது அரங்கேற்றப்பட்டது.

மூன்று பிரதான காரணங்களை அடிப்படையாகக்கொண்டே இந்தபோருக்கான சூழ்நிலையை இஸ்ரேல் ஏற்படுத்தியது. ஆனால் அவைகள் எதுவும் வெற்றியளிக்காத நிலையிலேயே இஸ்ரேல் போர் நிறுத்தம் செய்தது.

அதாவது ஹமாஸ் இயக்கத்திற்கு பயிற்சிகள், ஆயுதங்கள் என அனைத்துவிதமான உதவிகளையும் ஈரான் செய்துவருவதனால், ஹமாசுக்குஎதிராகபோர்ஒன்றைஆரம்பித்தால் ஈரான் நேரடியாக அதில் கலந்துகொள்ளும் என்று இஸ்ரேல் எதிர்பார்த்தது.

அவ்வாறு ஈரான் நேரடியாக களம் இறங்கினால் அதனை காரணமாக கொண்டு அமெரிக்காவுடன் செய்ய இருக்கின்ற அணு ஆயுத உடன்படிக்கையை தடுத்துவிடலாம் என்று இஸ்ரேல் திட்டமிட்டது.

ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தில் மீண்டும் அமெரிக்கா இணைவதை குழப்பும் முயற்சியில் இஸ்ரேல் ஈடுபட்டு வருகின்றது. மேலும், ஜெருசலத்தினை இஸ்ரேலின் தலைநகராக அறிவிப்பதென்றால் முதலில் அங்கு இருக்கின்ற இஸ்லாமியர்களை வெளியேற்ற வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் போர் செய்கின்ற பொழுது பொது மக்களின் குடியிருப்புக்களில் இஸ்ரேல் தாக்குதல் நடாத்துவதும், அதனால் பொது மக்கள் அங்கிருந்து அகதிகளாக இடம்பெயர்வதும், அந்த இடத்தில் யூதர்களை குடியேற்றுவதுமே கடந்தகால வரலாறு. இதனையே இம்முறையும் எதிர்பார்த்தனர். ஆனால் ஜெருசலத்திலிருந்து மக்கள் வெளியேறவில்லை. இதுவும் இஸ்ரேலுக்கு தோல்வியாகும்.

அத்துடன் இன்றைய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு உள்நாட்டு அரசியலில் தனது செல்வாக்கினை இழந்திருக்கின்றார். அவர் மீது அதிகமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

தனது அரசியல் செல்வாக்கினை உயர்த்துவதற்கு நெதன்யாஹுவுக்கு போர் ஒன்று அவசியமாக தேவைப்பட்டது. ஆனாலும் வெற்றியின்றி சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் காரணமாக கடும்போக்கு யூதர்கள் மத்தியில் அது விமர்சனத்தை உண்டுபண்ணியுள்ளது. இதனால் இந்த போரின் மூலம் அவரது செல்வாக்கினை அதிகரிக்க முடியவில்லை. இதுவும் ஓர் தோல்வியாகும்.

இன்றைய போரின் போது உலக அரங்கில் இஸ்ரேலுக்கு எதிராக எழுந்த எதிர்வலைகள் போன்று கடந்த காலங்களில் ஏற்பட்டதில்லை. சமூக வலைத்தள ஊடகங்களின் வளர்ச்சியே இதற்கு பிரதான காரணமாகும்.

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உட்பட உலகம் முழுவதிலும் இஸ்ரேலுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதுடன், இந்த ஆர்ப்பாட்டங்கள் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவினையும், அனுதாபத்தையும் அதிகரிக்க செய்துள்ளது. இதை இஸ்ரேல் எதிர்பார்க்கவில்லை.

இஸ்ரேல் காஸாமீது குண்டுகளை போட்ட போது அது இஸ்ரேலின் தற்காப்புக்கான உரிமை என்று அமெரிக்க ஜனாதிபதி கூறியதுடன், ஐ.நா. சபையில் இஸ்ரேலுக்கு எதிராக சீனாவால் மூன்று தடவைகள் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளையும், ஐ.நா. சபையால் வெளியிட இருந்த அறிக்கையையும் அமெரிக்கா தடுத்தது.

பின்பு உலக அரங்கில் இஸ்ரேலுக்கு ஏற்பட்ட எதிர்ப்பலைகள் இறுதியில் தன்மீதும் வந்துவிடக்கூடாது என்பதற்காக போரை நிறுத்துவதற்கு கடுமையான அழுத்தங்களை வழங்க வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு உருவானது.

அத்துடன் இஸ்ரேல் நகரங்களுக்குள் வாழ்கின்ற யூதர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடையில் கலவரங்கள் ஆங்காங்கே நடைபெற ஆரம்பித்தது. இது உள்நாட்டு கலவரங்கள் ஏற்பட்டு அமைதியற்ற நாடாக மாறிவிடுமோ என்ற அச்சம் இஸ்ரேலுக்கு ஏற்பட்டது.

காஸாவில் பொதுமக்கள் மீது இஸ்ரேல் நடாத்திய தாக்குதல்களை அங்கிருந்த ஊடகங்கள் அவ்வப்பொழுது உலகத்தின் பார்வைக்கு கொண்டுவந்ததன் காரணமாக, குறித்த ஊடக நிறுவனங்கள் செயல்பட்டுவந்த கட்டடம் இஸ்ரேலினால் அழிக்கப்பட்டது. இதனால் இஸ்ரேலுக்கு எதிராக போர்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கு குறித்த ஊடகங்கள் முயற்சிக்கின்றன.

காஸா மீது நடாத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்கள் காரணமாக ஹமாஸ் இயக்கத்தை அழித்துவிட்டோம் என்று இஸ்ரேல் கூறினாலும், அங்கு ஹமாஸ் இயக்கம் அழியவில்லை. மாறாக ஏராளமான அப்பாவி பொதுமக்கள் மரணித்தனர். பலர் காயமடைந்தனர். அங்குள்ள பொது மக்களின் வீடுகளும், கட்டிடங்களும், பாதைகளும் அழிக்கப்பட்டன.

ஆனால் ஹமாஸ் இயக்கமானது பத்து தொடக்கம் முப்பது மீட்டர் ஆழத்தில் மொத்தமாக 450 - 500 **KM** வரையிலான சுரங்கப் பாதைகளை அமைத்து அதன் வழியாகவே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலில் பாவிக்கப்பட்ட அமெரிக்காவின் 'பங்கர் பஸ்டர்' குண்டானது பதினைந்து மீட்டர் ஆழத்தினை தாண்ட முடியாதது. அதனால் ஹமாசின் சில சுரங்கப்பாதைகள் அழிக்கப்பட்டாலும், பெரும்பாலான பிரதான சுரங்கங்களை அழிக்க முடியவில்லை. இதுவும் இஸ்ரேலுக்கு தோல்வியாகும்.

வழமையான வான் தாக்குதலை நடாத்திவிட்டு தரை தாக்குதலை ஆரம்பிப்பர். ஆனால் இந்த போர் ஆரம்பித்ததிலிருந்து சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரைக்கும் ஹமாஸ் இயக்கத்தின் ஏவுகணை தாக்குதலில் எந்தவித சோர்வும், பின்னடைவுகளும் இருக்கவில்லை. இது இஸ்ரேலின் போரியல் வரலாற்றில் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இந்த போர் ஹமாஸ் இயக்கத்துக்கு மட்டுமல்ல, ஈரான் மற்றும் இஸ்ரேலை குறிவைக்கின்ற அனைத்து நாடுகளும் இஸ்ரேலின் வான் பாதுகாப்பு பலவீனங்களை அறிந்துகொள்வதற்கு உதவியுள்ளது.

எனவே காஸாசின் கட்டடங்கள் அழிக்கப்பட்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதை மட்டும் காரணமாகக்கொண்டு வெற்றி தோல்வியினை நிர்ணயிக்க முடியாது. அரசியல் ரீதியான காரணிகளும் வெற்றி தோல்வியினை தீர்மானிக்கின்றன.

முகம்மத் இக்பால் சாய்ந்தமருது

# விளையாட்டு செய்திகள்

## இலங்கைக்கு எதிரான போட்டி: பங்களாதேஷ் அணியில் Naim Sheikh-இற்கு வாய்ப்பு



இலங்கை அணிக்கு எதிராக எஞ்சியுள்ள ஒரு நாள் போட்டிக்கான பங்களாதேஷ் அணியில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அதற்கமைய, 21 வயதான ஆரம்ப துடுப்பாட்ட வீரர் Naim Sheikh-இற்கு பங்களாதேஷ் அணியில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

19 வயதிற்குட்பட்ட பங்களாதேஷ் குழாத்தை Naim Sheikh பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி அன்று (28) நடைபெறவுள்ளது. அன்றைய போட்டி எஞ்சியுள்ள நிலையில், தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பா சம்பியன் லீக் இறுதிப் போட்டி: வில்லாரியல் அணி முதல்முறையாக சம்பியனானது!

ஐரோப்பா சம்பியன் லீக் தொடரின் இறுதிப் போட்டியில், வெற்றிபெற்று வில்லாரியல் அணி முதல்முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளது. மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், ஸ்பெனியின் வில்லாரியல் அணியும் இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைடெட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.




இப்போட்டியின் 29ஆவது நிமிடத்தில் வில்லாரியல் அணியின் ஜெரார்ட் மொரேனோ அணிக்காக முதல் கோலை பதிவு செய்தார். இதனைத்தொடர்ந்து போட்டியின் 55ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனை டெட் அணியின் எடின்சன் கவானி பதில் கோல் அடித்தார். இதனால் இரு அணிகளும் 1-1 என சம நிலை பெற்றது. இதன்பின் போட்டி நேரம் முடியும் வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் வெற்றியாளரை தீர்மானிப்பதற்கு 30 நிமிடங்கள் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. அதிலும் கோல் அடிக்கவில்லை. இதனால் பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் நீண்ட நேரம் சென்ற பிறகு வில்லாரியல் 11-10 என வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

## ரியல் மட்ரிட் கால்பந்து கழக அணியின் தலைமை பயிற்சியாளர் ஸினெடின் ஸிடைன் இராஜினாமா!

புகழ்பூத்த ஸ்பெயினின் ரியல் மட்ரிட் கால்பந்து கழக அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியை ஸினெடின் ஸிடைன் துறந்துள்ளார்.

அவரது பயிற்சியாளர் ஒப்பந்த காலம் 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை இருந்த நிலையில் அதற்கு முன்பாகவே பதவியிலிருந்து விலகியுள்ளார்.

2016-18ஆம் ஆண்டு வரை ரியல் மட்ரிட்டின் பயிற்சியாளராக இருந்த 48 வயதான ஸிடைன் அதன் பிறகு அந்த பதவியில் இருந்து விலகினார். அப்போது அவரது பயிற்சி காலத்தில் ரியல் மட்ரிட் அணி கழகத்துக்கான உலகக்கிண்ண, சுப்பர் கிண்ணம் உட்பட 9 சம்பியன் பட்டங்களை வென்றது.



இதன்பிறகு ரியல் மட்ரிட் அணி, ரொனால்டோ உள்ளிட்ட பிரபல வீரர்களின் விலகலால் தடுமாற்றத்தை சந்தித்த காலகட்டமான 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீண்டும் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றார்.

ஆனால் இம்முறை நடப்பு லா லிகா கால்பந்து தொடரில், நடப்பு சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய ரியல் மட்ரிட் அணி, இரண்டாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது. அத்துடன் இந்த ஆண்டுக்கான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக்கில் அணி அரையிறுதியுடன் வெளியேறியது.

இந்த தொடர்ச்சியான தோல்விகளால் அவர் தற்போது தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இந்தநிலையில் இது தொடர்பாக கழக நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'ஸிடைனின் முடிவை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். இத்தனை ஆண்டுகளில் அவரது தொழில்முறை பயிற்சி பணி, அர்ப்பணிப்பு, ஆர்வம் எல்லாவற்றுக்கும் நன்றி கடன்பட்டுள்ளோம்.

ரியல் மட்ரிட்டின் தனி அடையாளங்களில் ஸிடைனும் ஒருவர். ரியல் மட்ரிட் எப்போதும் அவரது சொந்த ஊர் அணி போன்றது என்பதை அவர் அறிவார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சீசனில் ரியல் மட்ரிட்அணி எந்த சம்பியன் பட்டமும் வெல்லவில்லை. 10 ஆண்டுகளுக்கு பிறகு சீசன் ஒன்றில் ரியல் மட்ரிட் அணி ஒரு சம்பியன் பட்டம் கூட வெல்லாதது இதுவே முதல்முறையாகும்.

## இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றி: தொடரை வென்றது பங்களாதேஷ்!

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், இலங்கை அணி 97 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றி இலங்கை அணிக்கு ஆறுதல் அளித்திருந்தாலும், மூன்று போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் தொடரை பங்களாதேஷ் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

டாக்கா மைதானத்தில் அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, குசல் பெரேரா 120 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டஸ்கின் அஹமட் 4 விக்கெட்டுகளையும் சொரிபுல் அஸ்லாம் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 287 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 42.3 ஓவர்கள் நிறைவில் 189 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இலங்கை அணி 97 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமதுல்லா 53 ஓட்டங்களையும் மொசடெக் ஹொசைன் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், துஸ்மந்த சமீர 5 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பினுர பெனார்டோ 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக துஷ்மந்த சமீரவும் தொடரின் நாயகனாக முஷ்பிகுர் ரஹூம் தெரிவுசெய்யப்பட்டனர்.



## பாகிஸ்தான் சுப்பர் லீக்: சயிட் அப்ரிடி– நயீம் ஷா விலகல்!

நடப்பு ஆண்டுக்கான பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரிலிருந்து பாகிஸ்தானின் முன்னணி வீரர்களான சயிட் அப்ரிடி மற்றும் நயீம் ஷா விலகியுள்ளனர். முல்தான் சுல்தான்ஸ் அணியின் சகலதுறை வீரரான 41 வயதான அப்ரிடி, கராச்சியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது முதுகில் காயம் ஏற்பட்டது. முழுமையான ஓய்வு தேவை என மருத்துவர் அறிவுறுத்தியுள்ளதன் காரணமாக அவர் நடப்பு தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக இடது கை சுழற்பந்து வீச்சாளராக இருக்கும் 34 வயதான ஆசிப் அஃப்ரிடி அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, குவெட்டா கிளாடியேட்டரின் வேகப்பந்து வீச்சாளர் நசீம் ஷா நடப்பு தொடரிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். பி.சி.ஆர் சோதனையில் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளதால், அவர் நடப்பு தொடரில் இடம்பெறமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒத்திவைக்கப்பட்ட ஆறாவது பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடர், அபுதாபியில் நடைபெறவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



# உலக செய்திகள்

## யாஸ் சூறாவளியால் இந்தியாவில் மூவர் உயிரிழப்பு!

இந்தியாவின் கிழக்கு பகுதியை தாக்கிய யாஸ் சூறாவளியினால் இதுவரை மூவர் உயிரிழந்துள்ளனர். சூறாவளி காரணமாக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

யாஸ் சூறாவளியினால் ஜார்க்கண்ட் மாநிலம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மேற்கு வங்கமும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கப்பகுதியில் மணித்தியாலத்திற்கு சுமார் 140 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியுள்ளது.

பலத்த காற்றுடன் கூடிய மழையினால் மேற்கு வங்கத்தின் சுமார் 1100 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன. யாஸ் சூறாவளி எதிர்வரும் 6 மணித்தியாலங்களில் தாழமுக்கமாக வலுவிழக்குமென இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதன் தாக்கத்தால் எதிவரும் சில மணித்தியாலங்களுக்கு மேற்கு வங்கம் உள்ளிட்ட பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யகூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. சீரற்ற வானிலையால் கொல்கத்தா உள்ளிட்ட 4 விமான நிலையங்கள் பகுதியளவில் மூடப்பட்டுள்ளன.



## பிரித்தானிய சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது பிரான்ஸ்!

இந்திய கொரோனா வைரஸ் மாறுபாடு தீவிரமாக பரவுவதால் பிரித்தானிய சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்திய சமீபத்திய ஐரோப்பிய நாடாக பிரான்ஸ் மாறியுள்ளது.

மே 31ஆம் திகதி முதல், பிரித்தானியாவிலிருந்து வரும் எவரும் ஏழு நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.




கடந்த வாரம் பிரித்தானியாவின் வருகைக்கு ஜேர்மனி இரண்டு வார தனிமைப்படுத்தலை விதித்தது. ஜூன் 1ஆம் திகதி முதல் பிரித்தானிய நேரடி விமானங்களுக்கு ஆஸ்திரியா தடை விதித்துள்ளது.

கடந்த வாரத்திற்குள், இங்கிலாந்தில் பி.1.617.2 மாறுபாட்டின் 3,424 தொற்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த எண்ணிக்கை முந்தைய வாரத்தை விட 2,111 தொற்றுகள் அதிகரித்துள்ளது.

இந்த குளிர்காலத்தில் பிரித்தானியாவின் கொரோனா வைரஸ் தொற்றுநோய்களுக்கு காரண மான கென்டில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட பிரித்தானிய மாறுபாட்டை விட இந்திய மாறுபாடு தீவிரமான என்று இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரி பேராசிரியர் கிறிஸ் விட்டி கூறியுள்ளார்.

## தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு mask அணிவதில் விலக்கு!

கொரோனா தடுப்பூசியின் ஒரு டோஸ் எடுத்தவர்களும் முகக் கவசம் அணிவதை நிறுத்துவதை வரும் ஜூலை மாதம் முதல் அமல்படுத்த தென்கொரியா திட்டமிட்டுள்ளது.



இதுதொடர்பாக அந்நாட்டு சுகாதாரத் துறை அமைச்சர் கிவான் தியோக் சயல் கூறுகையில், கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட தடுப்பூசி திட்டத்தில் இதுவரை 30.9 லட்சம் பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஜூன் மாத இறுதிக்குள் 1.3 கோடி பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்பின்னர் ஒரு டோஸ் எடுத்துக் கொண்டவர்கள் முகக் கவசம் அணியத் தேவையில்லை என அறிவிக்கப்படும். அதேநேரத்தில், சமூக இடைவெளியைப் பின்பற்ற முடியாத இடங்களில் கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும். பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு சலுகை அளிக்கப்படும் என்றார்.

## தேர்தல் சட்டத்தில் திருத்தம்: ஹொங்கொங் சட்டப்பேரவையில் நிறைவேற்றம்!

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட சட்டமூலம் ஹொங்கொங் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 40 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் பதிவாகின. ஹொங்கொங் சட்டப்பேரவை உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சீனாவுக்கு ஆதரவாக இருப்பதால் இந்த சட்டமூலம்எளிதில் நிறைவேறியது.

இந்த சட்டமூலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 35இல் இருந்து 20ஆக குறைக்கப்பட்டும், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 90ஆக உயர்த்தப்பட்டும் உள்ளது.

மொத்த உறுப்பினர்களில் 40 உறுப்பினர்களை சீனாவுக்கு ஆதரவான தேர்தல் குழு தேர்வு செய்யும் அதிகாரம் இந்த மசோதாவில் உள்ளது.

மேலும், சட்டப்பேரவை உறுப்பினர்களாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரங்களை தேசிய பாதுகாப்புத் துறை ஆய்வு செய்யும். அவர்கள் தேசப்பற்று கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## 90 நாட்களில் கொரோனா பிறப்பிடத்தை கண்டு பிடிக்க உத்தரவு!

கொரோனா தொற்று விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவியதா? அல்லது ஆய்வகத்தில் இருந்து பரவியதா? என்ற விசாரணையை நுண்ணறிவு அமைப்புகள் தீவிரப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான அறிக்கையை 90 நாள்களில் அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கொரோனா தொற்று எங்கிருந்து, எப்படி பரவியது என்ற இறுதி முடிவுக்கு வரும் வகையில் இரட்டை முயற்சி மேற்கொண்டு அமெரிக்க நுண்ணறிவுப் பிரிவினர் விசாரணையை துரிதப்படுத்த வேண்டும். விசாரணைக்கு உதவியாக அமெரிக்காவின் தேசிய ஆய்வகங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சீனாவை இந்த விசாரணையில் முழுமையாக ஈடுபடுத்தவும், வெளிப்படையாக தன்னிடம் உள்ள தகவல்கள், ஆதாரங்களை அளிக்க வலியுறுத்தவும் சர்வதேச நாடுகளுடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றும்.

கொரோனா பிறப்பிடம் குறித்த ஆய்வில் தாமதப்படுத்தினால் விசாரணை தோல்வியில்தான் முடியும். ஆகையால்தான், மார்ச் மாதம் நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றவுடன், கொரோனாவின் பிறப்பிடம் குறித்து விசாரணை நடத்தி உடனடியாக தற்போதைய நிலை அறிக்கை தாக்கல் செய்ய தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கு உத்தரவிட்டேன்.

அதன்படி, மே மாதம் எனக்கு கிடைத்த விசாரணை அறிக்கையில் கொரோனா பிறப்பிடம் இரண்டு சூழலில்தான் நடந்திருக்க வாய்ப்பு உள்ளது என்றும், இதில் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தது. இதுகுறித்து விரிவாக விசாரணை நடத்தி 90 நாள்களில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுளேன் என்று ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவின் வூஹானில் கொரோனா தொற்று பாதிப்பு முதலில் கண்டறியப்பட்டது. உலகம் முழுவதும் 35 லட்சத்துக்கு மேற்பட்டோர் இதுவரை கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, வூஹான் ஆய்வகத்தில் பணியாற்றிய ஆய்வாளர்கள் 2019, நவம்பரில் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர் என்று அமெரிக்க உளவுத் துறை அறிக்கை அளித்தது. ஆகையால், இந்தத் தொற்று சீனாவிலிருந்து பரவி இருக்கும் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

இதற்கு மறுப்பு தெரிவித்த சீனா, அமெரிக்க ஆய்வகங்களில் இருந்தும்கூட இந்தத் தொற்று பரவி இருக்கலாம் என்று கூறியது. முன்னதாக, கொரோனா பிறப்பிடம் குறித்து ஆய்வு நடத்திய உலக சுகாதார அமைப்பு, வௌவால்களிடம் கொரோனா தொற்று குறித்து வூஹான் ஆய்வகத்தில் ஆய்வு நடத்திய போது இந்தத் தொற்று பரவி இருக்கலாம் என்று கூறப்படுவதற்கு குறைவான காரணங்கள் உள்ளன என்று தெரிவித்தது.

இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. உலக சுகாதார அமைப்பின் ஆய்வில் 17 சீன ஆராய்ச்சியாளர்கள் இடம்பெற்றிருந்ததால் இந்த முடிவு அறிவிக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டது.

# அமரர்
# சக்திவேற்பிள்ளை ராஜேஸ்வரி

(தினப்புயல் ஊடக நிறுவன பணிப்பாளரின் அன்புத்தாயார்)

தோற்றம்

1950

08

14



மறைவு

2021

05

28

**பிரிவால் துயருறும் தினப்புயல் ஊடக நிறுவனம், வவுனியா.**

தினப்புயல் ஊடக நிறுவனத்தின் பணிப்பாளரின் தாயார் 28.05.2021 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார். கொழும்பை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சக்திவேற்பிள்ளை இராஜேஸ்வரி 28.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அன்னார் காலம் சென்ற வீரன் கந்தையா அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், காலம் சென்ற சக்திவேற்பிள்ளையின் அன்பு மனைவியும் செல்வன். ச.சுரேஸ் சிவானந்தன் (இலங்கை பெந்தகோஸ்தே சபை மதகுரு), திருமதி. மி.ஸ்ரீவாணி (தாதியர்), திரு. ச.பிரகாஸ் (தினப்புயல் ஊடக பணிப்பாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பகாந்தி சந்திரவதனா மற்றும் காலம் சென்ற சிவராஜா, ஜெயராஜ், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், மில்ரன் ஜோன் அன்ரன், குளோரி ரெபியா ஆகி யோரின் மாமியாரும், போவாஸ் டிலோன், மியோனி டெப்பினி, கவ்யா ஜொகானா, ஔவ்யா சிலோபியா ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்கால வசிப்பிடமான இல:-169, வனவாசல வீதி, வத்தளை, கொழும்பில் நடைபெறும்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு இவ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை மன வருத்தத்துடன் அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
மேலதிக தொடர்புகளுக்கு
077 3142763
ச.பிரகாஸ் (பணிப்பாளர் - தினப்புயல் ஊடக நிறுவனம்)

தினப்புயல் பத்திரிகை
தினப்புயல் தமிழ் இணையதளம்
தினப்புயல் ஆங்கில இணையதளம்
நிதர்சனப்புயல்
இதயப்புயல்

**பிரிவால் துயருறும் தினப்புயல் ஊடக நிறுவனம்**

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 30.05.2021 அன்று வெளியிடப்பட்டது.